# திராவிடநாடு

2 அணா

## ஊது சங்கே!

ஊமைமொழிக்கு உயிரூட்ட எண்ணமிட்டு
ஓங்கு தமிழை ஒழித்துவிடப்பார்க்கிறார்!
ஆமைமுதுகோட்டை அகற்றியதன் மேற்பட்டு
ஆடை அணிதல் அழகென்றால் ஒப்பிடுமா?
தேமதுரமொழியைத் தித்திக்கும் செந்தமிழை
தென்றற் சுகத்தைத் திராவிடத்தின் தண்ணழகை
நாமுயிரோடிருக்க நசுக்கிவிடத்தான் துணிந்தால்
நடக்காது! தமிழ்வெல்லும்!! நாளிதுவென்றூதுசங்கே!

ஆலைத்தொழில்கள் அத்தனையும் வடவருக்கு!
ஆசைக்குத் தென்னாட்டில் ஆலையெனில் அருகில்லை
தோல் போதுமென்று சுளையை அவர்கைதந்து
தோன்றுந்து நிற்கும் தொண்டரடி ஆழ்வார்கள்
கால்வருடி நின்று கட்சி விட்டுத்தாவியபின்
கனமாகி நம்மைக் கண்டிப்போர் செவிகிழிய
ஆல்போற்றழைத்த அறிவுலகத் நம்பியெல்லாம்
ஆக்கும் சக்திகளாய் ஆனாரென்றூது சங்கே!

[ந. மா. முத்துக்கூத்தன்]

## பார்வதி-பரமசிவன்
# உரையாடல்

"எங்கே புறப்பட வேண்டுமென்று சொல்லவில்லையே, நாதா!"

"நரகத்துக்கு!"

"நாமேன், அங்கு போக வேண்டும்?"

"நாம் இருக்கவேண்டிய இடம் அதுதானாம்! கற்பகவிருட்சமும், காமதேனும், ரம்பையும் ஊர்வசியும் கீதமும் நடனமும் குழைந்தோடும் தேவலோகம், தகாதாம் நமக்கு!"

"கூறுவது யார்?"

"பாபியல்ல; பக்தன்! நிந்தகனல்ல; வேதபூஷணன்! பெரிய வேதாந்த சிரோன்மணியென விருதுகள் பெற்றவன், கீழ்சாதி கூட அல்ல, பிராம்மணன்"

"பிராம்மணனா, இப்படிச் சொல்லுவது?"

"ஆமாம், பர்வதகுமாரி, இந்தியத் துணைக் கண்டத்துக்கே துணைத் தலைவர் இராதாகிருஷ்ணன் எனும் பெயருடைய ஆள் — பேசியிருக்கிறார், பரோடாவில்"

"நாம் எல்லாம் நரகத்துக்குப் போகவேண்டிய அளவுக்கு என்ன தீங்கு செய்தோம்"

"நரகத்தில்தான் பாபிகள் இருக்கிறார்களாம், பாபாத்மாக்களை உஜ்ஜீவிக்க வேண்டியதுதான், கடவுளின் வேலையாம். ஆகவே, 'என்னைக்கேட்டால் கடவுளிருக்க வேண்டிய இடம் நரகமே என்பேன், என்று தெரிவிக்கிறார்"

"அடப்பாவி! பாபம் செய்தவர்கள், நரகத்துக்குப் போகிறார்கள்—புண்யம் செய்கிறவர்கள் சொர்க்கத்துள் நுழைகிறார்கள் ......"

"பாபம், புண்யம் செய்யும்படி மனிதனை ஆட்டிவைப்பது எது?"

"அவனுடைய இச்சா சக்திகள்" ..."ஆமாம், ஆத்மாதானே மனிதனை ஆட்டிவைக்கிறது"

"அந்த ஆத்மாவை ஆட்டிவைப்பது, எது?"

"என்ன நாதா, நீங்களே இப்படிக் கேள்விகளைப்போட்டால்...?"

"நான் போடவில்லை, தேவி, இப்படியெல்லாம் கேட்கிறார்கள்—பூலோகத்தில். அவனன்றி ஓரணுவும் அசையாது என்கிறீர்களே? அப்படியானால் ஆத்மாவை ஆட்டிவைப்பது பிர்ம்மம்தானே, அந்த பிரம்மம்தானே, உலகையெல்லாம் படைப்பது? அதன் படைப்பில், ஏனிப்படி சொர்க்கம்? நரகம்? மாடிவீடு—குடிசை—உயர்சாதி—கீழ் சாதி—பறையர்—பார்ப்பனர், இதெல்லாம் ஏன்? இப்படியெல்லாம் கேட்கிறார்களே, அவர்களுக்கு என்னபதிலைச் சொல்வது?"

"பூலோகத்திலிருக்கும் நமது பக்தர்கள் என்ன பதிலைச் சொல்லுகிறார்கள்?"

"கோபம் வரும்போது திட்டுகிறார்கள், அவர்களை; கை தட்டுதலைப் பெறவேண்டுமெனக் கருதும்போது இப்படிப் பேசுகிறார்கள் நம்மையெல்லாம் நரகத்திலிருக்க வேண்டுமென்றாரே, இராதாகிருஷ்ணன் அந்த ஆளைப் பார்த்தாயா? பேசி முடிந்ததும் மெருகு குலையாத காரிலேறி, வானமளாவும் மாளிகைக்குள் 'ஜம்'மென்று நுழைவதை! அவரிருக்கும் பூலோகத்திலேயே இருக்கிறது நரகம்—சேரிகள் உருவில், ஆலைகளுக்கு அருகில், இல்லாதவர்கள் மத்தியில், அங்குபோய் இருக்க முடியவில்லை, இந்த பக்தனால்! பரமண்டலத்திலிருக்கும் நமக்கு புத்தி சொல்ல வந்துவிட்டார் புத்தி!"

"இந்தப் பக்தர்களால் நமது மானமே பறிபோகிறது, சுவாமி! உள்ளமோ கள்ளர் குகை; செயலோ செந்நாய்! இந்த அக்கிரமத்துக்கு ஒரு முடிவில்லையா? நம்மைக் காட்டி மக்களை ஒரு புறம் ஏமாற்றிக் கொண்டு, இன்னொரு பக்கம் நரகத்துக்கும் போகச்சொல்கிறார்களே!"

★

# காரணம் கண்டுபிடிக்கிறார்!

"எதற்காகக் காங்கிரசில் சேர்ந்தோம் தெரியுமா? ஜஸ்டிஸ் கட்சியிலிருந்தபோது நாங்கள் கொண்டிருந்த கொள்கைகளையெல்லாம், இன்று காங்கிரஸ் ஏற்றுக் கொண்டுவிட்டது. சகலருக்கும் வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்பதை காங்கிரஸும் ஏற்றுக்கொண்டுவிட்டது. அதனால்தான், நானும் கோபால மேனன்போன்ற பழைய ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும் இன்று காங்கிரசிலிருக்கிறோம்" என்று செட்டிநாட்டுச் சீமான், இக்காலத்திலும் 'ராஜா'வென அழைக்கப்படும் பேறு பெற்ற பூமான், தோழர் எம். ஏ. முத்தையா அவர்கள், அக்டோபர் 19ந் தேதியன்று சிங்காரச்சென்னையின் கடலோர ஓட்டல் ஒன்றிலே நடைபெற்ற தேனீர் விருந்தின்போது விளக்கமளித்திருக்கிறார்.

புதிதாக சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரே தலைவராக தோழர் கோபால மேனன் என்பவர்—அவர் பழைய ஜஸ்டிஸ் கட்சிக்காரராம். அதனைக் குறிப்பிடுவதோடு, செட்டி நாட்டாரின் ஆனந்தம் அடங்கிவிடவில்லை; அவர்போன்றோரெல்லாம், இன்று காங்கிரஸ் கட்சியிலிருக்கிறோம். ஏன் தெரியுமா? நாங்கள் கொண்டிருந்த கொள்கைகளைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டுவிட்டது, எனவும் கூறுகிறார்.

செட்டி நாட்டாரின் ஆனந்தத்தின் அளவு நமக்குத் தெரிகிறது—காங்கிரசாரின் ஆட்சியில் அவரது குடும்பம் பெற்றிருக்கும் இடமும் நமக்குப் புரிகிறது—வெள்ளைக்காரன் ஆண்டபோதும், அடையாறு மாளிகையில் ஆனந்தம் குறைந்ததில்லை — சுயராஜ்ய வீரர்கள் அரசபாரம் ஏற்றதாலும், மினுக்கும் மெருகும் குலைந்துவிடவில்லை — அந்தக் காலத்திலும், அரசியல் மந்திரக் கயிறு இருந்தது —இப்போதும், ஆச்சாரியார் முதலமைச்சராக வரவேண்டுமானாலும் அவருக்குப் பின் காமராஜர் வந்தாலும், இருவருக்கும் ஏற்றபடி நடந்து இன்முகம் காட்டி, தான் பெற்றிருக்கும் இடத்துக்குப் பாதுகாப்பு தேடிக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது, செட்டிநாட்டு மாளிகைக்கு. அழகான மாளிகை! நீலத்திரை, மோதும் கண்கவரும்காட்சி! அதைவிட, 'செக்' புத்தகமும், அதைக் காட்டி பலரது வாயடைக்கும் 'பாக்கியமும்' இருக்கும்போது, யார் வந்தாலும் அவர்களை ஜீர்ணித்துக் கொள்ளமுடியும் என்கிற துணிச்சல் இருக்கிறது. இல்லையென்றால் ஒரு தம்பி சிரஞ்சீவி கார்ப்பரேஷன் கவுன்சிலர், இன்னொரு தம்பி எப்போதும் வியாபார சபையின் தலைவர், தானோ அழியாத அரசியல் சூத்ரதாரி எனும் ஆனந்தத்தைத்தொடர்ந்து சுமக்க இயலுமா?

(4-ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 23-10-55 [இதழ் 16

# வாய் இனிக்கப் பேசி!

மிகவும் தெளிவாகவே தெரிகிறது — இந்தியைத் தென்னாட்டிலுள்ள சகல மக்களும் வெறுத்து வருகிறார்கள் என்கிற உண்மை. இந்தி எதிர்ப்பு என்பது, ஏதோ ஒருசிலரின் கூச்சல் என்று கருதப்பட்ட காலம்போய், இன்று காங்கிரசாரும், கல்வியறிவு மிக்கோர் அனைவரும், 'கனம்'களும்கூட கவலைப்படவேண்டிய ஒரு விஷயமாகி விட்டது.

மித்திரனில், இந்தியைக் கண்டித்து, அடிக்கடி கேலிச் சித்திரம்— இந்துவில் உப தலையங்கங்கள்— 'மெயிலில்' கிண்டற் துணுக்குகள்— அழகப்ப செட்டியார் கல்விக் கமிட்டி இந்தியை எதிர்த்து அறிக்கை—சென்னைப் பல்கலைக் கழகம் இந்திவெறி கூடாதென்று தீர்மானம் — வடாற்காடு மாவட்ட போர்டு கண்டனம் — காமராஜரே இந்தி வெறியைப்பற்றி ஏதாவது சொல்லவேண்டிய நிர்ப்பந்தம்— கல்வியமைச்சர் சுப்ரமணியம் டில்லி பீடத்தின் போக்கை இடித்துரைப்பது—என்கிற அளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கிறது.

இந்த விழிப்புணர்ச்சியையும் வேகத்தையும், காண உண்மையிலேயே மகிழ்ச்சியுறுகிறோம். இந்திதான் பொது மொழி என்று வலியுறுத்தும் கம்யூனிஸ்டுகள்கூட, வடநாட்டாரின் 'வெறி'ப் போக்கைக் கண்டிக்காமலில்லை. சாதாரண காங்கிரஸ் நண்பர்களோ, வெளிப்படையாகவே வெறுத்துப் பேசி வருகிறார்கள். தேசியமெனும் மாயை விலக விலக இந்தி ஆதிக்கம் கொண்டுவரும் அளவிலா ஆபத்துத் தெரிகிறது.

இப்படி நாடு முழுவதுமே இந்தியால் கேடு வரும், ஆகவே அதனைத் தடு, என்று முழக்கமிட்டுக் கொண்டிருக்கும்போதே, வாய் இனிக்கப் பேசியவண்ணம் "எல்லா மொழிகளையும் நாம் மதிக்கத்தான் வேண்டும். தென்னிந்திய மொழிகளில் ஒன்றை வட இந்தியர்களாகிய நாம் கற்றே ஆகவேண்டும். இந்தி விஷயத்தில் வெறி கூடாது — படிப்படியாகவே செல்ல வேண்டும்'' என்று கூறிக்கொண்டே டில்லிபீடம் சகல துறைகளிலும் 'இந்தியை' நுழைத்து வருகிறது.

தெரியும் எல்லோருக்கும், நேரு பண்டிதரும், பண்டித பந்த் போன்றோரும் அடிக்கடி எவ்வளவு உறுதிமொழிகளைத் தந்து வருகிறார்கள் என்று. ஆனால் அதே சமயத்தில் நடைமுறை நிகழ்ச்சிகளைப் பார்த்தாலோ நேர்மாறாக இருக்கிறது.

வடக்கேயிருந்து இந்தியில் பொறிக்கப்பட்ட தபால் கார்டுகள் இறக்குமதியாகிக்கொண்டிருக்கிறது! 'நயா-பைசா' வெளிவருகிறது! நாள்தோறும், இந்திக்கு ஆக்க மூட்டும் வகையில், ஏதாவது ஒரு செய்தி வந்த வண்ணமே உள்ளது.

மொழியின் விஷயத்தில் அவசரம் கூடாது என நேருபண்டிதர், இங்கு வந்தபோது, உறுதிமொழி தருவதுபோலப் பேசினார். ஆனால், இதோ அவருடைய நெருங்கிய உறவினர், ஆர். கே. நேரு எனும் பெயருடையார், அகண்ட சீனத்தின் தூதுவராகச் செல்லும் பாக்கியம் பெற்றவர், அறிவிக்கிறார் இனிமேல், தான், இந்திய சர்க்காருடன் பீகிங்கிலிருந்தபடி சகலவித கடிதப் போக்குவரத்துகளையும் இந்தியிலே நடத்தப் போவதாக. தூதுவராலயக் கடிதப் போக்குவரத்துகள் அனைத்தும் இந்தி மொழியிலேயே நடைபெறுமாம். அறிவிக்கிறார், ஆர். கே. நேரு-அவரோ, நேருபண்டிதரின் நெருங்கிய உறவினர்—உலகின்மிகப்பெரிய நாடுகளில் ஒன்றானசெஞ்சீனாவுக்கு அரசுத்தூதர்.

வெளிநாட்டு விவகாரங்களுக்கும் இந்தியாம். — விசித்திரமாக வருகிறது தகவல்.

இப்படி சகல துறைகளிலும், இந்தி தன்னுடைய கரங்களை நுழைத்துக்கொண்டிருக்கிறது.

ஆனால் அதேவேளையில், டில்லி பீடத்திலிருக்கும் பெரியவர்கள், 'அவசரப்படேல்,' என்று அன்பு கனியச் சொல்கிறார்கள்.

நமது அமைச்சர்களும், புதிய ஆதரவாளர்களுமோ கண்டனமும் கார்ட்டூனும் போட்டு, எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி. எப்படி வந்தாலும் நாங்கள் விடோம். என்று, முழக்கம் எழுப்புகிறார்கள்.

வாய் இனிக்கப் பேசிய வண்ணம் நஞ்சு தடவப்படுகிறது, நாட்டின் முக்கிய துறைகளில்! நண்பர்களும் டில்லியார் கூற்றை இன்னும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

★

## இரயில்வே தொழிற் சங்கம்

தென் பகுதி இரயில்வே மென்யூனியன் என்கிற பெயருடன், அறிவுலகக் கொள்கைகளை ஏற்று, தொழிலாளர் தம் நலனுக்குப் பாடுபட்டு வரும் தொழிற் சங்கத்தைப்பற்றித் தோழர்கள் பலர் அறியக்கூடும்.

அதில் இடம் பெற்றிருப்போரில் பெரும்பாலானோர், திராவிட இயக்கப் பற்றுதலும், தீவிரமான கொள்கை கொண்டோருமாகிய நமது அருந் தோழர்கள்தான்.

அந்தச் சங்கத்தின் வளர்ச்சி, நமது கொள்கையின் வளர்ச்சியாகும். ஆகவே, அது சம்பந்தமான எல்லா ஒத்துழைப்புகளையும், அளிக்குமாறு இரயில்வே தொழிலாளர்களைக்கேட்டுக்கொள்கிறோம்.

சாதாரணமாகவே இதுபோன்ற தொழிற் சங்கங்கள், கட்சி அடிப்படையில் அமைவது நல்லதல்ல எனும், கருத்துக்கொண்டோர் நாம். எனினும் என் செய்வது, நமது கழகக் கொள்கைகள் மீது பற்றுகொண்டோருக்கு நாம் ஒரு வழியைச் சொல்லியாகவேண்டுமே? அந்த வகையில் பார்க்கும்போது, எல்லா வகையிலும் சிறந்தது, தென் பகுதி இரயில்வே மென் யூனியனாகும்.

அதன் நிர்வாகிகளும், நடத்திச் செல்வோரும், நம்மவர்கள்தான்.

ஆகவே, அதன் வளர்ச்சியில் ஒவ்வொரு கழகத் தோழரும் ஈடுபட்டு, பங்கெடுத்துக்கொள்ளுமாறு இரயில்வேயில் பணியாற்றும் தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தொழிற் சங்கக் கூட்டங்களில் கலந்துகொண்டு அதன் வளர்ச்சிக்கு தி. மு. கழகச் சொற்பொழிவாளர்களும், தோழர்களும் ஒத்துழைப்பார்களாக. வளர்க, எஸ். ஆர். எம். யூ.

2-பக்கத் தொடர்ச்சி

ஜஸ்டிஸ் கட்சியிலிருந்தபோது அவர் கொண்டிருந்த கொள்கைகளைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டு விட்டதாம். அதனால், அவரும் கோபால மேனனைப்போன்றோரும், காங்கிரசில் சேர்ந்து விட்டார்களாம்.

ஜஸ்டிஸ் கட்சியில் அவரைப் போல இருந்தவர்தான், பி. டி. ராஜன்—எனினும், இன்னும் தான், ஒரே ஒரு ஆளாக இருந்தாலும் அக்கட்சியின் பெயராலேயே இருப்பேன் என்று பிடிவாதமாக இருக்கிறார். அவரைப்போல நீதிக் கட்சியிலும் அதே சமயத்தில், அய்யப்பா, என் மெய்யப்பா, என்று பக்திக் கட்சியிலும், இரு உருதாரிகளாய் இருக்க முடியாத காரணத்தால், திராவிட கழகமாகப் பிரிந்து இன்று திராவிட முன்னேற்றக் கழகமாக வளர்ந்திருக்கும்—நாமும், ஜஸ்டிஸ் கட்சியிலிருந்தவர்கள் தாம்.

செட்டி நாட்டு மாளிகை 'ஜஸ்டிஸ்' கட்சியின் கோட்டையாகப் பயன் பட்டபோது, சீமான் முத்தையா சில பல கட்சித் தோழர்களுடன் மட்டுமே உரையாடியிருக்கக் கூடும்—பெரியார் அவர்களின் தொடர்பை சிறிது அதிகமாகப் பெற்றிருக்கக் கூடும் — ஆனால், பெரியாரைச் சந்தித்து விட்டு உடனே கவர்னரைப் பார்க்கவும், வைஸ்ராயைப் பார்த்துவிட்டு உடனே ஈரோட்டுக்குப் பறக்கவுமாக 'இந்த வேலை'களில் அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இலட்சியம், கொள்கை என்று முழக்கமிட்ட வண்ணம் நாட்டின் நாலுவிடங்களிலும், கந்தலே ஆடையாய், வயிறே பசிக் குகையாய், பார்ப்பனரல்லாதார் வாழ்வே தன் உடற் பசியாய்க்கொண்டு உலவினரே, தொண்டர்கள், தூய உள்ளம் கொண்ட தோழர்கள், மாண்ட அழகிரி, மறையாத மணி, மாயவரம் நடராஜன் ஆகியவர்களின் பரம்பரை, அல்ல, இன்றுகாங்கிரசுக்குள் போயிருந்து கொண்டு, ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைகள் காங்கிரசிலும் புகுந்து விட்டது என்று பேசுபவர்கள்—அந்தக் கூட்டம், இதோ, அணி அணியாகப் பவனி வருகிறது! ஆடிப்பாடுகிறது, எந்தக்காங்கிரசில் ஜஸ்டிஸ் கட்சி புகுந்திருக்கிறதென முத்தையா அவர்கள் கூறுகிறாரோ, அந்தக் காங்கிரசால், குண்டடி ஏந்துகிறது — பிணங்களாகி விழுகிறது — ஆறுமாதக் கடுங்காவலை அனுபவிக்கிறது — அதே நேரத்தில் இந்த சீமான்கள் அமெரிக்க விருந்தினருடன் குலாவுவதையும் பிரிட்டிஷ் பிரபுக்களுடன் ஒப்பந்தம் செய்து ஊரடிமை கொள்ள முயல்வதிலும் ஈடுபடும் வேலையில், தஞ்சையில் புயலா? இதோ ரூபாய் 27,000, என்று திரட்டியும் தருகிறது: ஏழைகள்தான், எனினும், ஜஸ்டிஸ் கட்சியின் இரத்தம் காங்கிரசுக்குள் புகுந்து விட்டது—ஆகவே, காங்கிரசுக்குப் போகலாம் என்று போய்விட வில்லை.

என்ன காரணம்? ஏதுமறியாதவர்களா, இவர்கள்? முத்தையாக்களைப்போல, மோகனமானமாளிகையிலும் 'டெலிபோனுக்கருகிலும்' இருந்தபடி, கட்சி நடத்துபவர்களா? அல்ல அல்ல. நாட்டில், நாள்தோறும் பவனி வந்துகொண்டிருப்பவர்கள் — மக்களின் உள்ளத்தை அறியும் வாய்ப்பு பெற்றவர்கள். இருந்தும் அவர்கள் கூட்டத்தோடு கோவிந்தா போட்டுக் கொண்டு, "எல்லாம் இருக்கிறது காங்கிரசில். ஆகவே, எல்லோரும் சேருவோம் காங்கிரசில்", என்று ஏன் போகவில்லை? என்ன காரணம் ஏமாளிகளா, கோமாளிகளா. அரசியலறிவற்றவர்களா? ஆராயும் பண்பில்லாதவர்களா.

காங்கிரசுக்கும் தாங்கள் கொண்டிருக்கும் கொள்கைகளுக்கும் உள்ள இடைவெளியை நன்றாக அறிவார்கள்.

வானத்துக்கும் ஆகாயத்துக்குமிடையே எப்படி ஒற்றுமையுண்டாக்க முடியாதோ, அதுபோலத்தான் காங்கிரசுக்கும் நமக்குமுள்ள இடைவெளி என்பதை தெளிவாக உணருவார்கள்.

அதனாலேயே, ஜஸ்டிஸ் கட்சிக்கு உயிரூட்டிய உத்தமர்களின் பரம்பரை இன்றும் தனித்து நின்று காங்கிரஸ் பாசிசத்தை எதிர்த்துப் போராடுகிறது. செட்டி நாட்டுச் சீமான்கள், அன்றும் சரி, இன்றும் சரி — கொள்கையின் உண்மைகளை அறியச் செலவழித்த நேரத்தைவிட, அதைக் கொண்டு தன் குபேரபுரியை எப்படிக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்பதற்காகச் செலவழித்த நேரமே அதிகம் — அதனை நாமும் அறிவோம். காங்கிரசிலுள்ள கண்ணியர்களும் அறிவார்கள்.

செட்டி நாட்டார், பூசிமெழுகிச் சொல்வதை வேறு சில பணக்காரர்கள் வெளிப்படையாகவே சொல்லுகிறார்கள் — பாருங்களப்பா, காங்கிரசை! பார்ப்பன புரியாக இருந்த இடம், பார்ப்பனரல்லாதோரின் கூடமாக ஆகிவிட்டது. பட்டியலைப் பாருங்கள், எத்தனை பார்ப்பனரல்லாதோருக்கு உத்யோகம் கொடுத்திருக்கிறது—என்னென்ன காரியங்களைச் செய்து வருகிறது—அறியீரோ, என்பதாக.

உத்யோகங்களைப் பெறுவது மட்டும்தான், நீதிக்கட்சியின் கொள்கையா? அப்படியாயின், காங்கிரசைவிட, வெள்ளையன் எவ்வளவோ செய்தானே, இப்போதும், அப்படிப்பட்ட வெள்ளையனே ஆட்சி செலுத்த வேண்டும் என்றொரு கட்சியை நடத்தலாமே!

*

பொது வாழ்க்கையின் பேரால் பவனி வருவதே, கவர்னரின் புன்னகையைப் பெறத்தான், சர்க்காருக்கும் தனக்கும் இருக்கின்ற நெருக்கம் குறையாமலிருப்பதே அரசியல் மேதாவிலாசம், எனும் கருத்துக்கொண்டோர் தங்களது ஆசைக்குக் காரணம் தர முற்படுகிறார்கள்.

செட்டி நாட்டார், காமராஜர் ஆட்சியிலும் இந்தக் களிப்பைக் காணப் பாடுபடுகிறார். ஆச்சாரியார் முதலமைச்சராக வந்தபோதும், இதே களிப்பைக் காட்டினார்.

அன்று ஆச்சாரியாருக்கு ஜே,
இன்று காமராஜருக்கு ஜே, ஜே.

இதனால், இவர்கள் உள்ளம், தெரியாமலில்லை மக்களுக்கு—யார் வசம் அதிகாரக் கயிறு இருக்கிறதோ அவர்களின் துதிபாடி, அவர்களுடைய அத்யந்த சகாவாக இருப்பதே இவர்களுடைய அரசியல் வாழ்வாக இருந்து வருகிறது.

இந்தச் சுபாவத்தைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கிற காரணத்தால்தான், தி. மு. க. இவர்களை அலட்சியப் படுத்துகிறது. இப்படிப்பட்டவர்களின் நட்பை உதறித் தள்ளுகிறது

சீமான்கள், ஆளும் கட்சிக்குத் துணை போவதைக் கண்டு நாம் வியக்கவில்லை—இவர்கள் எல்லாம் இன்று இருப்பதற்கு இலாயக்கான ஒரே ஒரு கட்சி காங்கிரஸ்தான். அங்கே அவர்கள் போய்ச் சேருவதைப்பற்றி, அக்கறையில்லை, நமக்கு. ஆனால், அதற்கும் ஒரு நோக்கம் கற்பித்து — வெள்ளுடை வேந்தன் தியாகரின் நீதிக் கட்சியின் எண்ணம் நிறைவேறுவதால்தான் காங்கிரசை ஆதரிப்பதாக விளக்கம் கூறுகிறார்களே—அதுதான் விசித்திரமாக இருக்கிறது.

★

# எட்டு நாட்கள்

சி.என்.அண்ணாதுரை.

ஓரிரவு! அற்புதமான நிலவு! அலங்காரப் படகு ஏறி மாணவனுடன் சென்று, கடற்காட்சி கண்டுவிட்டு, ப்ருனோ திரும்புகிறார். மாணவனுக்குப் பாடம் கற்றுத் தருகிறார்—அவரே பாடம் பெறுகிறார், இயற்கையைக் கண்டு களிக்கிறார், இதற்கு இணையான இன்பம் வேறு ஏது என்று கேட்கிறார். பால்வண்ண நிலவைக் கருநிற மேகம் கவ்விக்கொள்வதுண்டு—ஆனால் நிலவு அதனைக் கிழித்தெறிந்துவிட்டு வெற்றி ஒளி வீசும்! ப்ருனோவைக் கவ்விக்கொள்ள, கருமேகமல்ல, கரு நாகம், மனித உருவில் வந்தது, மத விசாரணைக் குழுவினர், சீமானிடம் செய்து வைத்திருந்த ஏற்பாட்டின்படி, முகமூடி அணிந்துகொண்டு மாளிகை நோக்கி வருகின்றனர். கடற்பயணம், நிலவொளி, அறிவுதரும் இன்பம் இவைகளில் திளைத்திருக்கிறார் ஜியார்டானோ — அக்ரமக்காரர்கள் அவர் அறியா வண்ணம், மெல்ல மெல்ல நடந்துவருகிறார்கள் அவரை நோக்கி. இயற்கையின் இனிமை பற்றி அவர் வண்ணச் சிந்து பாடுவதுபோலப் பேசி மகிழ்கிறார், வன்னெஞ்சர்கள், அவரருகே வந்துவிட்டனர், பின்புறமாக! எல்லையற்ற இன்பமே! இயற்கை அழகே! என்று அவர் மன எழுச்சியுடன் கூறுகிறார், கருப்பு போர்வையைச் சரேலென அவர்மீது வீசி அவரைச் சிறைபிடிக்கின்றனர், கயவர்கள்! ஒரு கணம்! எங்கும் இருள் சூழ்ந்துகொண்டது. திடுக்கிட்டார்! சிங்கம் பிடிபட்டுவிட்டது; சீலர் சிறைப்படுத்தப்பட்டார். நிலவின் அழகு கண்டு மகிழ்ந்திருந்தார், அவரைப் பாதாளச் சிறைக்கு இழுத்துச் சென்று அடைத்தனர் பாதகர்கள்.

மாளிகையிலே இருந்தது பாதாளச் சிறை! ஆறு ஆண்டுகள் அதிலே அவரை அடைத்துவைத்தனர். ஒளி கண்களில் படுவதில்லை! பறவைகளின் இன்னிசையை அவர் செவி கேட்கவில்லை! இருட்டறை! தனி அறை! ஆடை களையப்பட்டு, அலங்கோலமான நிலை! இரும்புச் சங்கிலிகள்! இந்தக் கொடுமை, ஆறு ஆண்டுகள், வெனிஸ் நகர மாளிகைச் சிறையில்.

நம்பிக்கையற்றவனை நல்வழிப்படுத்த, மதவாதிகள் கையாண்ட முறை என்ன? அவன் உணரும் வண்ணம் உண்மையை அவன் முன் எடுத்து வீசினரா? இல்லை! இரத்தம் பீறிட்டுக்கொண்டு வருமளவுக்குச் சவுக்காலடித்தனர்! மார்க்க ஏடுகளை அவன் முன் கொட்டி "மதியிலி! இதைப்படி, அறிவுபெறு" என்றனரா, இல்லை, கட்டி வைத்து அடித்தனர், இரும்பு வளையங்களிட்டு இம்சித்தனர், இரும்புப் பலகைமீது சாயவைத்து, இரும்பு முள் வளையங்களுள்ள உருளைகளை அவன் மீது உருட்டுவர்; ஆழப்பதிந்து எலும்புவரை உள்ள சதையைப் பிய்த்து வெளியே கொண்டுவரும் -சிலர் மாண்டுவிடுவதுண்டு, பெரும்பாலானவர்கள், குற்றுயிராகிவிடுவர், இரத்தம் கசியக்கசிய அவன் வேதனைப்படும்போது, "வேதத்தை ஏற்றுக்கொள்கிறாயா, என்று கேட்பர்; அவன் தேகம், சல்லடைக் கண்போலத் துளைக்கப்பட்டுக்கிடக்கும்போது, "தேவனை பூஜிக்கிறாயா?" என்று கேட்பர். அவன் குற்றுயிராகக் கிடக்கும்போது "குருவுக்குக் கீழ்படிகிறாயா?" என்று கேட்பர். பழத்தைச் சாறுபிழிந்து பருகி இன்பம் பெறுவர் மக்கள், இந்த மகானுபாவர்கள் பகுத்தறிவு கொள்ளத் துணிபவரின் இரத்தத்தைப் பிழிந்து எடுத்து, அவனுக்குக் காட்டி, இன்பம் பெற்றனர்.

ஜியார்டானோ ப்ருனோ, ஆறு ஆண்டுகள் இந்தக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டான்! உடலில் இன்னும் கொஞ்சம் வலுவிருக்கிறது, பிடிவாதம் குறையவில்லை, இன்னும் சில நாட்களில் பயல் பணிந்துவிடுவான் என்று எண்ணிக் கொண்டனர்—அந்த அக்ரமக்காரர்கள் அது போலப் பலரைப் பணிய வைத்தவர்கள்! ஆனால் ப்ருனோவை அவர்கள் அடிக்கடி காண முடியுமா!

அவர் அவர்களுடைய முறை கண்டு, மனம் உடையவில்லை. தகுந்த விலை கொடுக்கிறோம், என்றே எண்ணிக் கொண்டார்.

"இந்த மகா பாபி, என்னவெல்லாம் சொன்னான், சொல்லு தம்பீ," என்று வாலிபச் சீமானை, ப்ருனோ எதிரே கொண்டுவந்து நிறுத்தி வைத்துக் கேட்டனராம் ஒரு நாள்—அவன் குளறினான், "ஐயன்மீர்! ஏன் அந்த அறியாச் சிறுவனை இம்சிக்கிறீர்கள். நானே கூறுகிறேன் கேளும்" என்று கேலியாகப் பேசினாராம் ப்ருனோ.

இவ்வளவு இம்சைக்குப் பிறகும் இவனிடம் பிடிவாதம் இருக்கிறதே என்று திகைத்த அந்தத் தீயர்கள், ப்ருனோவைத் திருத்தலத்துக்கே அனுப்பிவிடத்தான் வேண்டும் என்று தீர்மானித்தனர்—ப்ருனோ, ரோம் நகர் கொண்டுசெல்லப்பட்டான். மோட்சலோகத் திறவுகோல் உள்ள திருத்தலமல்லவா, ரோம்! இரண்டாண்டுகள் அங்கே சிறை! அவ்வப்போது, மத நூல் வல்லுநர்கள் ப்ருனோவை விசாரிப்பர்'—ஒவ்வோர் முறையும், ப்ருனோவின் அறிவுத் தெளிவு அவர்களைத் திகைக்கச் செய்தது, இறுதியில், 'இவன் திருத்தப்படமுடியாத நாத்தீகன்' என்று திருச்சபையினர் தீர்ப்பளித்து, இந்தப் பாவியின் இரத்தம் மண்ணில் விழாதபடி இவனைக் கொள்க! என்று கட்டளையிட்டு, அதனை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பை அறமன்றத்துக்கு அளித்தனராம்.

இரத்தம் கீழே சிந்தலாகாது என்றனராம்! ஆறு ஆண்டுகள் அந்த வெனிஸ் நகரச் சிறையிலே இரத்தமும் சதையும் கலந்து கலந்து வெளிவந்தது—இப்போது இரத்தம் கீழே சிந்தலாகாது என்றனராம்! என்ன பொருள் அதற்கு? உயிரோடு கட்டிவைத்துக் கொளுத்து என்பதாகும்.

ஆண்டு பலவாக அவர்கள் படித்த மத ஏடுகள் ஏராளம்—ஐயன் அருளும் உடையார் என்று கூறப்பட்டது—அவர்களால் ஒரு 'நாத்திக'னுடன் வாதிட்டு, அவன் கொள்கையை முறியடிக்க இயலவில்லை — உயிரோடு கொளுத்திவிடு என்றுதான் கூறமுடிந்தது, என் செய்வார்கள் அவர்கள்! அவனுடைய அறிவுக் கிளப்பும் புரட்

சித் தீ, மடாலயத்திலே குன்றெனக் குவித்துவைத்துள்ள மத ஏடுகளைச் சுட்டுப் பொசுக்குகிறதே! தப்ப வழியில்லை, எனவே அவனைத் தீயிலே தள்ளு என்றனர்.

''நாத்திகன்—எனவே நாதன் இவனைத் தண்டிப்பார், நிச்சயமாக'' என்று கூறிடக்கூட இவர்களுக்கு, நம்பிக்கை இல்லை! ஒரு வேளை, அவர்கள் ஆண்டவனின் தீர்ப்புக்கு இந்த வழக்கை விடலாகாது, ப்ரூனோ பக்கம் தீர்ப்புக் கிடைத்தாலும் கிடைத்துவிடும், என்று அஞ்சினர் போலும்! ஆத்திகத்தைக் காத்திட அரண்மனைகளும் மாளிகைகளும் மட்டுமல்ல, சிறு குடில்கள் இலட்ச இலட்சமாக உள்ளன — இதனை ஒரு ப்ரூனோவின் கொள்கை என்னசெய்துவிடமுடியும், கத்தித் திரியட்டும், நமது பக்தர்களின் தொழுகையின் சத்தத்தின் முன்பு இவனுடைய புரட்சிக் குரல் நிற்குமா, என்று எண்ணும் துணிவு இல்லை! ஒருவேளை, ப்ரூனோ வென்றுவிட்டால், தங்கள் ஆதிக்கம் என்ன கதி ஆவது என்ற அச்சமே அவர்களைப் பிடித்தாட்டிற்று.

பிராடெஸ்டன்டுகளைக் கூடச் சகித்துக்கொள்ளலாம் —அவர்கள் அடிப்படையை மறுக்கவில்லை, நமது ஆதிக்கத்தில் இருக்க மறுக்கிறார்கள், எனினும், ஜெபமாலை, தொழுகை, இவைகள் உள்ளன; இவன் போன்றோர், அனுமதிக்கப்பட்டால், பிறகு, நமக்கு மிச்சம் என்ன இருக்கும்? இவன்தான், விண்ணிலே சுவர்க்கம் இல்லை, மண்ணுக்கு அடியில் நரகம் இல்லை, என்று பேசுகிறானே, இந்த இரண்டும் இல்லை என்று மக்கள் தீர்மானித்துவிட்டால், நாம் ஏது, நமக்குள்ள இந்த சுவைமிக்க வாழ்வு ஏது, என்று எண்ணினர் — குலை நடுக்கமெடுத்துவிட்டது— கொளுத்துங்கள் இவனை, என்று கொக்கரித்தனர்.

பழிபாவத்துக்கு அஞ்சாத பாவியாக இருக்கலாம் ஒருவன்—தாங்கிக்கொள்ளலாம், பாவத்தைத் துடைத்திடும் பரிகார முறை தரலாம், திருத்தலாம்; கொள்ளைக்காரனைக் கூட, புண்யவானாகும்படி புத்தி கூறி, கோயில் கட்டச் சொல்லலாம்; கசிந்து உருகு காரிகையே! கற்பு இழந்த என்னைக் காப்பாற்று என்று நெஞ்சுருக இறைஞ்சு! நோன்பு இரு! திருத்தலங்களைத் தொழுது அடியார்களை வழிபடு, பாவக்கறை கழுவப்படும் என்று கூறி வழுக்கி விழுந்த வனிதையை, மீண்டும் பரிசுத்தமாக்கிவிடலாம்— ஆனால் ப்ரூனோ! இவன் பாபம் செய்தால் பரவாயில்லையே —பாபம் என்று கூறுகிறீர்களே, எதை? என்றல்லவா, கேட்கிறான். மனிதன் நல்லவனாவதும் கெட்டவனாவதும் அவனிடமே இருக்கிறது, என்று கூறி, நம்முடைய வேலையைப் பறிக்கிறானே! விட்டுவைத்தால் விபத்து நிச்சயம், எனவே தீயிலே தள்ளுங்கள் என்றனர்.

''கோயிலை இடிப்பதும் கொளுத்துவதும், பாபம் தானே?''

''நிச்சயமாக, பாபம்தான்''

''இவன் கத்தோலிக்கத் தேவாலயத்தைக் கொளுத்திய மகாபாவி''

''ஏன் கொளுத்தினான் தேவாலயத்தை?''

''பிராடெஸ்டண்டு மார்க்கமாம்—எனவே, கத்தோலிக்க மடாலயத்தைக் கொளுத்துவது, புண்ணிய காரியம் என்று கருதிக்கொண்டானாம்.''

பிராடெஸ்டெண்டு நீதியாளர்களின், நெரித்த புருவம் மாறிவிடுகிறது—மன்னிப்புக் கிடைக்கிறது. அது போன்றே, கத்தோலிக்கர்கள், பிராடெஸ்டான்டை இம்சை செய்வது, பாவமாகாது என்று கருதி வந்தனர். எனவே பாபம், என்பதற்கே, இரு வகையினரும், ஒன்றுக்கொன்று நேர்மாறான விளக்க உரை தரலாயினர்.

ஆனால், ப்ரூனோ, இரு சாராருக்கும், 'ஆகாதவன்' ஏனெனில் அவன், உலகம் உருண்டை என்று கூறி, புனிதக் கருத்துக்களை மறுக்கிறான்! மாபாவி! எனவே கொளுத்திக் கொல்க என்றனர்.

கோபர்னிகஸ், உலகுபற்றிய தன் கருத்தைக் கூறு முன்பே, மத ஏடுகளைக் கேலிப் பொருளாக்கும் சம்பவமொன்று நடந்தது. ஆசார்ய புருஷர்களும், அர்ச்சகர்களும், சன்னிதானங்களும், சாதாரணச் சாமியார்களும், நம்பிக்கையுடனும் ஆவேசமாகவும், உலகு மோட்சம், நரகம், என்பவைபற்றிக் கூறிவந்த உபதேச உரைக்கு வேட்டுவைத்தான், ஒரு சாதாரணக் கப்பலோட்டி!

மாகெல்லான் என்பவன், ஸ்பெயின் நாட்டில், செவில்லி எனும் கடலகத்திலிருந்து கிளம்பினான் கலத்தில்— மேற்குத் திசையாக! மேற்குத் திசையாகவே சென்றான்! திசைமாறவில்லை; திரும்பவில்லை; மேலால், மேலால் செல்கிறான்—உலகம் தட்டை என்றால், கடைசி பாகம் எது காண்பேன், என்று பிடிவாதம் பேசுகிறான் — ''மகனே! மாபாவியாகாதே! அருளாளர்கள் அளித்த உண்மையைச் சந்தேகிக்காதே, உலகம் தட்டைதான்—நீ, கடைசிவரை சென்றால்—அதோகதிதான்,'' என்று மதவாதிகள் எச்சரித்தனர். அவனோ, நான் உலகம் உருண்டை என்று நம்புகிறேன்—உலகின் நிழல், சந்திரன் மீது வீழ்கிறது என்பதை உணர்கிறேன்—எனக்கு அந்த நிழல் தரும் நம்பிக்கையை, உங்கள் நிகண்டுகள் தரவில்லை, எனவே நான் செல்வேன், செல்வேன்'' என்று கூறுகிறான். வென்றான்! மேற்கு நோக்கியேதான் சென்றான், மாகெல்லான் திசை மாறவில்லை. **1519** ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் பத்தாம் நாள் செவில்லிவிட்டுக் கிளம்பியவன், **1522**ம் ஆண்டு, செப்டம்பர் **7**ந் தேதி, செவில்லி வந்தடைந்தான்—ஒரே திசையில் பயணம் செய்து! உலகம் உருண்டைதானே! என்றான். ஆமாம் போலிருக்கிறதே, என்று சிலர் இழுத்தாப்போல் பேசினர், மதவாதிகளின் மயக்கமொழி, மாகெல்லான் பெற்ற வெற்றியின் உண்மையை மாய்த்தது. உலகம் தட்டைதான் என்றனர் மக்கள். கோபர்னிகஸ், அறிவாளிகள் உள்ளத்திலேயே புயல் எழக்கூடிய வகையிலே ஏடு தீட்டினான். தேவாலயம் அதனைத் தீண்டாதீர் என்று உத்தரவிட்டது. 1616ம் ஆண்டு ப்ரூனோ இறந்து பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு, போப்பாண்டவரே முன்னின்று, கோபர்னிகசின் கொள்கையைக் கண்டிக்க வேண்டி நேரிட்டது! கொளுத்திவிட்டனர், ப்ரூனோவை. கொள்கையோ, மடியவில்லை, போப்பின் சாபம் வீசப்பட்டது—அப்போதும் சாகவில்லை-கொள்கை வளர்ந்தது. புதுப்புது ஆராய்ச்சியாளர்கள் தோன்றலாயினர்— ப்ரூனோவின் சார்பிலே பேசப் பலர் முன்வந்தனர். **278** ஆண்டுகள் போரிட்டுப் பார்த்தது, தேவாலயம்! உலகம் உருண்டை என்பதையும், சுற்றி வருகிறது என்பதையும் ஏற்க மறுத்தது. கடைசியில், களத்தைவிட்டு, தேவாலயத்தாரே ஓடிவிட்டனர், ப்ரூனோக்கள் அல்ல! ஒரு ப்ரூனோவைக் கொளுத்திவிட்டால் வேறு ப்ரூனோக்கள் கிளம்பமாட்டார்கள் என்று எண்ணியவர்கள் ஏமாந்தனர், பல்கலைக் கழகங்களும், ஆராய்ச்சிக் கூடங்களும், வேக வேகமாக புத்தறிவின் சார்பிலே, படை திரட்டித்தந்தன! என்ன மர்மமோ? என்ன மாயமோ? என்று மக்கள் கேட்டுக்கிடந்த பல நிகழ்ச்சிகளுக்கும் பொருள்களுக்கும் விளக்கம் அளிக்க முன்வந்தனர் ஆராய்ச்சியாளர்கள் — பழமைப்படை புறமுதுகிட்டோடிற்று. கடைசியில், ப்ரூனோவிடம் மத உலகு மன்னிப்புக் கேட்டுக்கொள்வதுபோல, **1821**-ம் ஆண்டு ஏழாம் பயஸ், எனும் போப்பாண்டவர், கோபர்னிகஸ் கொள்கைமீது இருந்த கண்டனத்தை வாபஸ் வாங்கிக்கொண்டார்! மதவாதிகளும், உருண்டை உலகில் வாழச் சம்மதித்தனர்!

இந்தப் பெரு வெற்றிக்காக, ப்ரூனோ, தீயிலே தள்ளப்பட நேரிட்டது. எட்டு நாட்களில், அவருடைய மனதிலே ஒரு துளி மருட்சியோ, மயக்கமோ கிளம்பி இருந்தால், போதும், அவர் உயிர் தப்பியிருக்கும். ஆனால் புத்தறிவு பிணமாக்கப்பட்டிருக்கும். ப்ரூனோ, உண்மை

பிழைக்கட்டும், என் உடல் சாம்பலாகட்டும் என்றார். எட்டு நாட்களிலே, அவர் மனக்கண்முன் தோன்றித் தோன்றி மறைந்த காட்சிகள் எத்தனையோ! துள்ளித் திரியும் பிள்ளைப் பருவத்தை எண்ணிக் கொண்டாரோ! மடாலயத்திலே துருவித் துருவிப் படித்த நாட்களை எண்ணிக்கொண்டாரோ! அன்பு பொழிந்த தாயையும், அக்கரை காட்டிய தந்தையையும் எண்ணியிருப்பார்! அவர் மனக் கண்முன் நடுக்கும் குரலுடன் பேசும் ஆன்ஸ்லம் பாதிரியாரும் திகைத்து நிற்கும் என்றி மன்னனும், தேள் கொட்டினவர் போல அலறிய ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர்களும், தெரிந்திருப்பர்! காட்டிக்கொடுத்த கயவனைக் கண்டிருப்பார்—பயத்துக்கு அடிமைப் பட்டவன், பரிதாபத்துக்குரியவன் என்று எண்ணியிருப்பார்.



எட்டு நாட்கள் தானே! விரைவிலே ஓடிவிடும்—என் கதையும் முடிந்து விடும்என்று எண்ணி இருந்திருப்பார்.

அவர்தம் எண்ணத்தை வெளியிட வாய்ப்பில்லை. விஷம் தரப்பட்ட சாக்ரடீசுக்கு, கடைசிப் பொழுதில், நண்பர்கள் உடனிருந்தனர்—உலகு, அவருடைய எண்ணங்களை ஓரளவு அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. ப்ரூனோவுக்கு அஃதும் இல்லை!

ஆனால், சொல்ல வேண்டியதைப் ப்ரூனோ, நாடுபல சுற்றிச் சொல்லி விட்டார்! ஒரு வாழ்நாளில் செய்ய வேண்டியதைச் செய்து விட்டார்! பல்கலைக் கழகங்கள் எல்லாம், உலகம் உருண்டையா? தட்டையா? என்று விவாதித்தவண்ணம் உள்ளன. தெளிவறியா மக்கள் மட்டுமே, புத்தறிவைக் கொள்ளப் பீதி அடைகின்றனர். வேலை முடிந்துவிட்டது போலத்தான்—அரியதோர் உண்மையை உலகு ஏற்றுக் கொள்வதற்காக, என் உயிர், காணிக்கையாகட்டும் என்று, எண்ணியிருப்பார்! அந்தத்தூய்மையாளன் உள்ளத்திலே, இத்தகு உயர் எண்ணங்களன்றி வேறென்ன மலர முடியும்.

எட்டு நாட்கள் ஓடின; மதவாதிகள் ஏமாந்தனர்—ப்ரூனோ வெற்றி பெற்றார்.

சதுக்கத்திலே, ஏராளமான கூட்டம்—வேடிக்கை பார்க்க, நாத்தீகனைக் கொளுத்தப் போகிறார்கள், ஆத்திகர்களுக்கு அந்த 'வாண வேடிக்கை'யைக் காண்பது தவிர வேறுவேடிக்கை இருக்க முடியுமா! வேடிக்கை மட்டுமா அது—'பக்தரின் கடமையுமாயிற்றே!

ப்ரூனோவுக்கு மஞ்சள் ஆடை அணிவித்தனர்—பாவிகளுக்கு, வேத நிந்தகருக்கு, மஞ்சள் நிற ஆடை தருவது வாடிக்கை.

அந்த உடையிலே, பேய் பூதம் பிசாசு, பெருநெருப்பு, போன்ற சித்திரங்கள்—இவன் நரகம் செல்கிறான் என்பதைக் காட்ட,

இழுத்துச் செல்கிறார்கள் ப்ரூனோவை! ஏறு நடை! கலங்கா உள்ளம்! புன்னகைகூடத் தெரிகிறது.

இரு மருங்கிலும் கூடி நிற்கும் ஏது மறியாதவர்கள், தூற்றுகிறார்கள்—ஏசுகிறார்கள்! ப்ரூனோ, அவர்களைக் கண்டு கோபம் கொள்ளவில்லை.

ஓடி வருகிறார் ஒரு சாமியார்—மரத்தாலான சிறு சிலுவையை ப்ரூனோவின் முகத்திற் கெதிரே காட்டுகிறார்—சாகுமுன் சிலுவைக்குப் பணியட்டும் என்று!

சிலுவை! இதன் பெயர் கூறிக் கொண்டு எவ்வளவு அக்ரமத்தைச் செய்கிறீர்கள், அறிவிலிகளே! என்று கேட்பவர் போல, ப்ரூனோ முகத்தை வேறோர் பக்கம் திருப்பிக்கொள்கிறார்.

கம்பம்—அதிலே கட்டுகிறார்கள்—தீ வளருகிறது! எதிரே, காட்டுக் கூச்சல்—ப்ரூனோ அமைதியே உருவானவராக நிற்கிறார், புகை சூழ்ந்து கொள்கிறது, அதைக் கிழித்துக் கொண்டு நெருப்பு தெரிகிறது—உடல் கருகுகிறது—அதோ, அதோ: என்று காட்டுகிறார்கள்—முகம் தெரிகிறது, தீச்சுழலுக்கு இடையில் அமைதியான முகம்—தியாகியின் முகம்!

தீயோர் மூட்டிய தீ, தன் வேலையைச் செய்து முடித்துவிட்டது—ப்ரூனோ சாம்பலாக்கப்பட்டார்.

ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டு என்றுகூறி அன்பு மார்க்கம் சமைத்துத்தந்தார் எமது தேவன் என்று கூறிக்கொண்டனர்; அவர்கள் ப்ரூனோவை நெருப்பிலிட்டனர்.

பலதெய்வ வணக்கத்தையும் காட்டுமிராண்டிச் சடங்குகளையும் எதிர்த்து அறப்போர்நடாத்தியஅண்ணலைச்சிலுவையில் அறைந்தார்கள் பாதகர்கள் என்று கூறின விசுவாசிகள், அந்தச் சிலுவை தரும் நெறியையும் மறந்து, ப்ரூனோவைத் தீயிலிட்டனர்.

"அவர்களை மன்னித்துவிடுக, அண்ணலே, அவர்கள் அறியார்கள் என்ன செய்கிறோமென்று" என்று சிலுவையில் அறையப்படும்போது ஏசு கூறினாரென்றுரைத்து உருகும் கிருஸ்தவர்வர்கள், ப்ரூனோவைக் கட்டி வைத்துக் கொளுத்தினர்.

ஆதிக்கத்திலிருந்த பல தெய்வ வழிபாட்டு முறையை எதிர்த்து அன்பு நெறி தந்த ஏசுவின் சொல்லைக் கேட்டும், செயலைக் கண்டும், அந்த நாள் மத ஆதிக்கக்காரர்கள், நாத்தீகன் என்று நிந்தித்தனர்—தெய்வத்தின் பெயர்கூறி வதைத்தனர். சிலுவை காட்சிதந்தது.

அக்ரமக்காரர்கள் தந்த கொடுமைகளைத் தாங்கிக் கொள்ளும் உள்ள உரமும், கொள்கைப்பற்றும் இருந்தது என்பதை எடுத்துக் காட்டும் சின்னம், இந்தச் சிலுவை என்றனர்—அதைக் கண்டும், கருத்திலே தெளிவுபெற

## நீட்டாத கடிதம்

அன்புள்ள சீமா,

ஏதோ நேரு பண்டிதர் போகிறாரே, அப்போது நாம் இங்கே உட்கார்ந்திருந்தால் என்ன நினைத்துக் கொள்வார் என்பதற்காக டில்லியிலிருந்து ஓடோடியும் வந்தால், நீ வேறு என்னைச் சிக்கலான நிலைமையில் வைத்துவிட்டாய். நான் காங்கிரசில் சேர்ந்தது எப்போது, எத்தனை நாளாக எனக்கும் தேசீய இயக்கத்துக்கும் சம்பந்தமுண்டு என்கிற விபரங்களெல்லாம் நோக்குத் தெரியாதா? இருந்தும், மயிலாப்பூர் சீனிவாச சாந்தி நிலையத்துக்கு, என்னைக் கூப்பிடலாமா! கூப்பிட்டதுதான் கூப்பிட்டீர்கள், காந்தி ஜயந்தி கொண்டாடவா என்னைக் கூப்பிடவேண்டும்? எத்தனை பேர் இல்லை! காந்தியால் படாதபாடு பட்டவர்கள்—அவர்களை விட்டு விட்டு என்னைக் கூப்பிடலாமா? வரவில்லையென்று மறுத்தால் மனக் கஷ்டம் உங்களுக்கு! போனால் எதைப்பற்றிப் பேசுவது என்பது என் சங்கடம், என்ன செய்வது? கடைசியில் உன் தொல்லை பொறுக்கமுடியாமல் வந்தேன்—கூட்டத்தைப் பார்த்தால் எல்லோரும் நம்மவா—அங்கே, எதைப் பற்றி நான் பேசமுடியும்? வேறு இடமாகயிருந்தாலாவது, "ஆகா! காந்தி, யார்? மகாத்துமா! மகாத்துமாக்கள் எப்போது தோன்றுவார்கள்? அக்கிரமம் அதிகரிக்கும்போது! கீதையில் கண்ணபரமாத்மாவே சொன்னார், 'அர்ஜுனா! உலகில் அக்ரமம் தழைக்கும்போது நான் அவதரிப்பேன்' என்று. அந்தக் கிருஷ்ணபரமாத்மாவின்கடைசி அவதாரம்தான் மகாத்மா! அவருக்கு நான் அத்யந்த சிஷ்யன்—எப்போதும் அவருடைய வார்த்தைகளைச் சிரமேற்கொண்டு, தொண்டு செய்தவன்" இப்படியெல்லாம் பேசிவிடலாம்! ஆனால், மயிலாப்பூரில் அப்படிப் பேசமுடியுமோ? சீமா! என்னைப் பத்றி நன்ரு தெரியுமே எல்லோருக்கும். அந்நிய சாமான்களைப் பகிஷ்கரியுங்கள் என்று அவர் கூவியபோதுதான் நான் இலண்டன் கம்பெனியின் ஷாப்புகளுக்கு ஏஜண்டானேன்! சுயராஜ்யம் என்று அவர் கதறியபோது 'வெள்ளைக்காரன் ஆட்சி போலாகுமோ' என்றேன்! இன்னும் சொல்லப்போனா, காங்கிரசுக்கு எதிரியான ஜஸ்டிஸ் கட்சியாரிடம்கூட சகவாசம் வைத்திருந்தேன். அப்படிப்பட்ட என்னை, நம்மவாளுக்கெல்லாம், நன்னாத் தெரியுமேடா! என்ன பேசறது?—இப்படி திகைப்பு வந்தது, நேக்கு. சரி! உண்மையையே சொன்னாப் போச்சு, என்றுதான் பேசினேன், மகாத்மா காந்திக்கு நான் ஒன்றும் சிஷ்யனல்ல. சிஷ்யனாக இல்லாதது மட்டுமல்ல, அவர்கூறிய அனைத்திலும் தீவிர நம்பிக்கை வைக்காதவனும் ஆவேன். இருந்தபோதிலும், என்னுடைய வாழ்க்கையை உருவாக்கியது அவருடைய போதனைகள்தான்" என்று பேசினேன். ஏண்டா, அப்படிக் குறும்பாகப் பார்த்தாய், "என்னுடைய வாழ்க்கையை உருவாக்கியது," என்று நான் சொல்லும்போது! டில்லியில் இவ்வளவு பெரிய மந்திரியாக என் வாழ்க்கையை உருவாக்கியது ..." என்று நான் மனதில் வைத்துக்கொண்டு அப்படிச் சொன்னதாகத்தானே எண்ணினாய்? டேய்! நீ மகா புத்திசாலியடா!! சூட்சுமத்தை எவ்வளவு சீக்கிரம் கிரகித்துக் கொள்ளுகிறாய். உனக்கு இருக்கும் புத்தி, அந்த சிவராமுவுக்குக் கொஞ்சம்கூட இல்லே—இதைக் கொண்டுபோய் பத்திரிகையிலே போடுவாளோ? படிக்கிறவா, என்ன நினைப்பா! மண்டு—போட்டிருக்கான்! அதனாலே' சீமா. இனிமே நான் இப்படிப்பட்ட சிக்கலிலே மாட்டிக்கொள்ளாதபடி திறப்பு விழா, கூட்டம் ஏற்பாடுசெய். எதைப் பற்றியிருந்தாலும் சரி, இந்தக் காந்தியைப் பற்றி மட்டும் வேண்டாம். ஆமாம்.

உன்,

T. T. கிருஷ்ணமாச்சாரி.

★

## பணமில்லையாமே!

—★—

பணமில்லை!—என்றார் நிதியமைச்சர், ஆசிரியர் பென்ஷனை உயர்த்தச் சொன்னபோது.

பணமில்லை! ஆகவே அதிகவரி விதிக்கிறோம்!!—என்றார் ரெவினியுமந்திரி, விவசாயிகள் தலையில், வரிப்பளுவை ஏற்றியபோது.

பணம் ஏது? எனவே, இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் நீங்கள் கேட்டதைத் தரமுடியாது—என்று திருப்பியனுப்பியது, காமராஜரை, டில்லிப் பீடம்.

இங்கும் பணமில்லை!
அங்கும் பணமில்லை!!

ஆனால், இதோ, பர்மாவுக்கு ரூபாய் இருபது கோடி கடனாகத் தந்திருக்கிறது, டில்லி. வாங்கிக் கொண்டு போக டில்லிக்கு ஆளும் வந்திருக்கிறாராம்.

பர்மாவுக்கு கடன்தர இருக்கிறது பணம் டில்லியிடம்! நமக்கு வழங்க, இல்லை!! அப்படிப்பட்ட டில்லியிடம் நம்மை அடிமையாக்கும் காமராஜர்களோ, நமது ஏழை விவசாயிகள் தலையில் கைவைக்கிறார்கள்.

தவிக்கிறோம், நாம்
தானதர்மம் செய்கிறது, டில்லி.

நியாயமா! நீதியா!!-என்பதை, நீங்களே, சொல்லுங்கள், தோழர்காள்.

★

மறுத்தனர்—அதைக் காட்டியே, ப்ருனோவைக் கொன்றனர்.

பாவிகளை இரட்சிக்க இரத்தம் சிந்தினார், என்று தொழுகையின்போது கூறுபவர்கள், ப்ருனோவைக் கொன்றால், அன்புக்கும் அறத்துக்கும் இழுக்காகுமே என்று எண்ணவில்லை. எங்கே தங்கள் ஆதிக்கம் அழிந்து பட்டுவிடுமோ என்ற அச்சத்துக்குத்தான் ஆட்பட்டனர். கோலாகலமாக ஆண்டுவந்த பழைய மார்க்கமன்னன் ஏசுவைக் கொன்றால்தான் தன் ஆதிக்கம் நிலைத்திருக்க முடியும் என்று எவ்விதம் கோபம் கக்கினானோ, அதற்குத் துளியும் குறைந்ததாக இல்லை, சிலுவை தொழுவோரின் சீற்றம்.

ஏசு மீண்டும் எழுந்து வந்தார் என்கிறார்கள், ப்ருனோ தேவன் அருள் பெற்றவன்கூட அல்ல், எனினும் ஜியார்டானோ ப்ருனோ சாகவில்லை—என்றும் நிலைத்து நிற்கும் உண்மை சாகாது.

ஜியார்டானோ ப்ருனோவைக் கொள்வதற்காக மூட்டப்பட்ட நெருப்பிலிருந்தும், கிளம்பிய சிறு சிறு பொறிகள், பல்வேறு இடங்களிலும் பரவி, குருட்டறிவை அழிக்கும் பணியாற்றின.

அவரை அக்ரமமாகக் கொன்றதற்குக் கழுவாய் தேடுவதுபோல, பிற்காலத்தில், அவருடைய உருவச்சிலையை வைத்தனர். ஆனால் அவர் அடைந்த வெற்றி அது அல்ல. பகுத்தறிவு, பெருமிதம்கொள்ளச் செய்ததே, அவர் அடைந்த வெற்றி. ப்ருனோ, வாழ்கிறார், வெற்றி வீரராக.

முற்றும்.




"சுவையான கவிதைகள்! சுந்தரமான கருத்துக்கள்! கவிஞரே, கானாம்ருதம் உண்டேன். இந்நாள் வரை உம்மைத் தேடிக் கண்டு பிடிக்காத நான், அபாக்கியவான். அதற்காக மெத்தவும் வருந்துகிறேன்"

"சக்கரவர்த்தி! பித்தன் என்று இங்குள்ளோரால் விரட்டப்பட்ட எனக்கு பெருமை தருகிறீர்கள். எத்தனையோமுறை, தங்கள் அரண்மனையை நோக்கி வலம் வந்திருக்கிறேன்—தூங்காத இரவுகள் ஏராளம். என்றாலும். என் மனதைவிட்டு நீங்காத ஆசையால்தான் இன்று உங்களைக் காணும் பாக்கியம் பெற்றேன்"

"பாக்கியசாலி நான் பாவாணரே! உங்களை இப்போதாவது காணும் பேறு பெற்ற நானே பாக்கியசாலி"

"அதிகமாகப் புகழ்கிறீர்கள், மன்னா..."

"நான் கவிஞனாக இருந்தால் உங்களைப்பற்றி இந்நேரம் ஓராயிரம் பாக்களைப் பாடியிருப்பேன். ஆனால் கேவலம், அரசன். அகிலம் உண்டு எனக்கு; ஆளத் தெரியும் எனக்கு. தாங்களோ, அகிலத்தையும் என்னையும் ஆளும் ஒப்பற்ற கவி! உன்னதமான கவி!"

"பேச முடியவில்லை, சக்கரவர்த்தி என்றால்"

"இனி நீங்கள் பேசவும் வேண்டாம்—கண் ஜாடை காட்டினால் போதும்! காவலர், காத்துக் கிடப்பர், பணிவிடைக்கு. ஒய்யாரமான மாளிகை தருகிறேன் — உங்கள் உல்லாசத்துக்கேற்ற வசதிகள் அத்தனையும் உண்டாக்கித் தருகிறேன். தேன் சொட்டும் கவிதைகளால், என்னைச் சாகாதவனாக்க வேண்டும். நான் இறந்தாலும், இந்த மண் உள்ளளவும் உங்கள் பெயரும் என்னுடைய பெருமையும் விளங்கவேண்டும்"

"கட்டளை மன்னா! சித்தமாயிருக்கிறேன், நான்"

"யாரங்கே?"

* * *

தேன் மலர்ச் சோலை, திருவடி வருடப் பலர்! ஒரு குறையும் வைக்கவில்லை, கவிவாணனுக்கு. ஏடெடுத்து எழுத அவன் உள்ளத்தைக் கிளறும் இனிய காட்சிகள் எவ்வளவு உண்டோ, அவ்வளவையும் ஏற்பாடு செய்யச் சொன்னான், வேந்தன். மாளிகை விழாக்கோலமாயிருந்தது எந்நேரமும்! மங்கையரின் கீதம், மலர்க்கொடிகளின் நடனம், ஏடு புரட்டுவோர் காத்துக் கிடப்பர் எழுதி

**அரங்கண்ணல்**

முடிந்த அவனுடன் உரையாடி உல்லாசமூட்ட, ஏவலாட்கள்—பார்வை திரும்பினால் பணிவிடை செய்யவேண்டுமே என்று இருந்தனர் வில்லிலே பூட்டப்பட்ட அம்பு போல, எவ்வித குறையையும் வைக்கவில்லை, மன்னன். ஆனால், அந்தக் கவிஞனோ, இந்தவசதிகளை ஏறெடுத்தும் பார்த்தானில்லை. கீதமும் நடனமும், பிரபுக்கள் சேவையும், பெண்மயில்கள் நடமாட்டமும் எட்டமுடியாதஉலகத்திலே அவன் பவனி வந்துகொண்டிருந்தான் — அந்த உலகிலே வேந்தன் தெரிந்தான். வேந்தன் கையிலும் வாளும் தெரிந்தது. விரோதிகளை நோக்கிப் படையெடுத்துச் சென்று வெற்றி கண்ட அவனது மூதாதையர் தென்பட்டனர். அவர்களின் அம்படிபட்டு ஓடிய குதிரை வெள்ளம் — ஜொலித்த மணிமகுடம் — பறிக்கப்பட்ட நாடுகள் வரிசை — பாராட்டுகூறிய அணங்குகள் தொகை — பட்டாபிஷேக வைபவங்கள் — காடு, மலை, கானாறு, தேன் சோலை......அவன் எழுத்தாணி கிறுக்கிக்கொண்டே இருந்தது. ஏடுகள், விழுந்துகொண்டே இருந்தன! விறுவிறு என்று. ஒவ்வொரு ஏடும், ஒவ்வொரு இலக்கியமாகும் என்று வேந்தன் கருதினானே ஒழிய, அந்தக் கவிஞன் கருதவில்லை. ஏனெனில், அவன் தற்புகழ்ச்சிக்காரனல்ல.

* * *

"சக்கரவர்த்தி!"

"பிரபோ! ஏழைக்கா அந்தப் பட்டம்?"

"ஏழையா, நீங்கள். கவிச்சக்கரவர்த்தியாரே, என்றைக்கு என் பார்வை தங்கள் மீது விழுந்ததோ அன்று முதல் தாங்கள் ஏழ்மையின் பிடியிலிருந்து விடுவிக்கப் பட்டுவிட்டீர்கள்..."

"வேண்டாம், மன்னா! வேண்டாம்! ஏழ்மையின் உலகிலிருந்து விடுதலை பெற நான் விரும்பவில்லை..."

"என்ன!"

"ஆம், மன்னா! தங்கள் திருப்பார்வை கிடைத்த பாக்கியத்தால் இந்த ஒரு அபுல்காசிம் மட்டுமே, விடுதலை பெறக்கூடும். உல்லாசமான, அரண்மனையில் வாழக் கூடும். அதனால், பயனில்லை. என் லட்சியம் வேறு!"

"அதைச் சொல்லுங்கள்..."

"அல்லாவின் கருணை எல்லோருக்கும் கிடைத்து, இந்த மண்ணில் கஷ்டப்படும் சகல ஜீவராசிகளும் சந்தோஷமாக வாழும் நாள் எப்போது வரும் என்பதே, என்னுடைய அவா. அதுவரையில், கூன், குருடு, செவிடு, ஊமை, ஏழை, மோழை, இவர்களில் ஒரு துளியாகவே நான் இருக்க விரும்புகிறேன்."

"உம்முடைய கவிதைகளைப் போல, நீரும் புதுமையான ஆளாக

இருக்கிறீர்! என்னுடைய ராஜ மன்றம், இதுவரை எத்தனையோ கவிஞர்களைச் சந்தித்திருக்கிறது. ஆனால், பொன்னும் பொருளும் விரும்பாத புலவர் ஒருவரையும் இது நாள்வரை நான் கண்டதே யில்லை."

"பொன்னும் பொருளும் எனக்குத் தேவையில்லை என்று உங்களிடம் தெரிவிக்கவில்லையே, மன்னா, நான்!"

"ஏழையர் உலகில் இருக்க விரும்புவதாகச் சொன்னீர்களே..."

"ஏழையருலகில் இருக்க விரும்புவதாகத்தான் சொன்னேன். ஆனால், பொன்னும் பொருளும் எனக்குத் தேவை — மிகமிகத் தேவை."

"புதிராகயிருக்கிறதே— உங்கள் பேச்சு! பொன் வேண்டும்—ஆனால் ஏழையாகவும் இருக்க வேண்டும். மாடி வீட்டிலே ஏழை!—எப்படி முடியும், கவிச்சக்கரவர்த்தி?"

"நான் பொன் கேட்பது, எனக்காகவல்ல, புருஷோத்தமரே! எனக்காக அல்ல! என்னுடைய ஊரிலேஒரு ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றிலே அடிக்கடி வெள்ளம், வந்துவிடுகிறது. அப்படி வெள்ளம்வரும் ஒவ்வொரு முறையும், என்னுடைய நகரமான டஸ் அழிந்து, நாசமாகிவிடுகிறது. அந்த நாசத்தினின்றும் என்னுடைய நகரம் தப்பவேண்டுமேயானால், பலமான சுவர் எழுப்பியாக வேண்டும்! அதற்காகத்தான் பொன் தேவைப்படுகிறது."

* * *

வேந்தன், வியந்தான்! இதுவரை யாரும், இப்படி பொதுநலத்துக்கென்று அவனிடம் பொன் கேட்டதில்லை. தத்தம் திறமையைக் காட்டி, ஏழையாகயிருந்த எத்தனையோ பாவாணரும் நாவாணரும் பொன் பெற்றுச் சென்று போக போக்கியங்களின் அதிபதிகளாகியிருக்கிறார்கள்! அரசே—எனக்கு ஆயிரம் பொன் வேண்டும், அழகான மாளிகை வேண்டும், மதுர கீதம் பாடும் மாதுளை இதழினர் தேவை, ஒட்டகக் கூட்டம் வேண்டும், ஊர்வேண்டும், உல்லாசக் கூடம் வேண்டும், என்று கேட்டிருக்கிறார்களே தவிர, இவனைப் போல் கேட்டதில்லை! ஊருக்குச் சுவர்போடவல்லவோ பொன் வேண்டுமாம். அதிலும், அந்தக் கவிகளைப் போன்றவனா, இவன்? அல்ல! அல்ல! பாரசீக நாட்டின் பேரீச்சம் பழத்தைவிட சுவையிருக்கிறது, கவிதையில்—பாலைவனப் பிரதேசத்திலே காணும் அருவிபோல இனிக்கும் எண்ணங்கள் — அத்தனையையும் எழுதி எழுதித் தள்ளுகிறான். அவனுக்குப் பொன் என்ன வைரங்களைக்கூடக் கொட்டிக் கொடுக்கலாம்! அரசனிடம் கிடைத்த செல்வாக்கைக் கொண்டு, குறுநிலக் கோமானாகப் பவனி வரக்கூடிய பாக்கியம் அவனை எதிர் நோக்கியிருக்கிறது. என்றாலும் அவன், நான் ஏழையாகவேயிருக்கிறேன்! ஆனால், பொன் கொடுங்கள்—பொது நலத்துக்குச்செலவிடுவதற்குத்தேவை" என்கிறான்.

ஒரு வேளை 'அக்குதொக்கு' இலாத ஆசாமியோ!

அடுப்பங்கரை புகையவேண்டியதில்லை—கை நீட்டினால் அன்ன விசாரம்போகும்—எனும் ஆண்டியோ!

சந்நியாசியோ—சகலமும் துறந்து அல்லாவின் மார்க்கத்துக்காகத் தன்னை அர்ப்பணித்துவிட்டவனா?

கேள்வி, கிளம்பிற்று, மன்னனிடமிருந்து! சிரித்தான், அந்தக் கவி!

"சக்கரவர்த்தி! ஊருக்குச் சுவர் கட்டபொன் கேட்பதால், என். வீட்டிலே மிதமிஞ்சிய சுகம் இருப்பதாகக் கருதிவிடாதீர்கள். என் இல்லம், ஒரு இடிந்துபோன குடிசை! அதற்குள் நுழைந்தால், அரும்பு போன்ற உடலுடன் ஒரு பெண்ணையும், துரும்புபோல ஒரு மாதையும் காணலாம்! அந்தத் துரும்புடலாள்தான், என் சகோதரி! கலியாணத்துக்காகக் காத்துக்கிடக்கும் அரும்பு என்னுடைய மகள்! அவர்களிருவருடைய கோலத்தையும் காண்பீர்களாயின், அப்போது தெரியும், தாங்கள் புகழும் இந்தக் கவிஞன், எவ்வளவு பெரிய சோக நாடகத்துக்குச் சொந்தக்காரன் என்பது. மகளுக்கு மணமுடிக்க பொன் இல்லாமல், கண்களை புண்ணாக்கிக்கொண்டிருப்பவன்தான், நான் — அழுது, அழுது வடிக்கும் கண்ணீரால்! ஆனாலும், என்னுடைய ஊருக்குச் சுவர்போட, பொன் கேட்கிறேன் உங்களை. ஏன்? என் மகளும் சகோதரியும் ஏங்கி நிற்கிறார்கள்! அவர்களுக்காவது நான் ஒருவன் இருக்கிறேன், என்கிற ஆறுதல் இருக்கிறது! ஆனால், என்னைப் போல ஒரு அண்ணன் இல்லாததால் தவிக்கும் உருவங்களும், அப்பாவை இழந்ததால் ஆதரவற்று அழுதுஓயும் குழந்தைகளும் ஆண்டுதோறும், டஸ் நகரைச் சுற்றி ஓடும் ஆற்றில்வெள்ளம்புரண்டோடி வரும் ஒவ்வொரு தடவையும்வளர்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் கோலத்தை சகிக்க முடியவில்லை, என்னால்! இப்படி, மடியும் மக்களுக்கு, வாழ்வளிக்க வேண்டும் என்பதே என்னுடைய ஆசை!" என்றான், கவிஞன்.

மன்னனுக்கு, வியப்பும் பெருமையும் அதிகமாயிற்று.

இன்னும்அதிகமாக்குவதுபோல், எல்லோரும் புகழும் வகையில் அமைந்துவிட்டது, நூல்.

அரங்கேற்றம், ஆகவேண்டிய நாள் நெருங்கிக்கொண்டிருந்தது.

* * *

பொறுப்பார்களா, அரசனின் அடிபணிவதால், அந்தஸ்தும் பெருமையும்பெறும்மின்மினிப்பூச்சிகள்! அதனால், எப்படியாவது அவனுக்கும் அரசனுக்குமிடையேயுள்ள தொடர்பைத் துண்டித்து விட வேண்டுமென்று திட்டமிடலாயினர்! குகைகள்—புலிகள்—திட்டங்கள் — ஆலோசனைகள், அதிகரிக்கலாயின.

அரங்கேற்ற நாள் வந்தது—கவிஞன், படிக்கலுற்றான்.

ஆகா! அடடா! அருமை! அற்புதம்! கண்டறியாதன கண்டோம்! இது நாள் வரை கேட்டறியாத கவிதை! — இப்படி, மன்றம், பாராட்டலாயிற்று.

மன்னனின் மூதாதையரின் சிறப்புக்களையெல்லாம், கற்பனையும் உண்மையும் கலந்து கலந்து, தீட்டியிருந்தான், கவிஞன்.

மன்னனின் மூதாதைகளில் ஒருவன், சிலகாலம் இஸ்லாமைவிட்டு வேறொரு மார்க்கம் சென்றிருந்தான்! தீயைக் கும்பிடுவோரின், மதம் அது! அந்த அரசனைப்பற்றி கவிஞன், தீட்டிய கவிதைகள் படிக்கப்பட்டன. கவிஞன், அந்த மன்னன் தழுவிய மதம் எத்தகையது, என்பதைப்பற்றி எழுதிய

இடம் வந்தது. ஆகா! அருமையான சந்தர்ப்பம்! விடக்கூடாது, கவிஞனை! என்று வீணர்கள், குதூகலம் அடையலானார்கள்.

"யார் இந்த அபுல்காசிம்? பெயரும் தழுவியிருக்கும் மதமும் இஸ்லாமாகயிருந்தாலும், அவன் எப்படி வர்ணிக்கிறான், பார்த்தீர்களா, தீ மதத்தை! அரசனின் மூதாதை ஒருவன் அந்த மதத்தில் சேர்ந்தான் என்பதைச் சாக்காகவைத்கொண்டு. எத்தனைக் கவிதைகள் தீட்டிவிட்டான் பார்த்தீர்களா? உள்ளத்தில் இருப்பதுதானே, கவிதை ரூபத்திலும் வெளிவரும்! ஆகவே, இவனொரு, வேத நிந்தகன்! குரானைக் குறை கூறுபவன். இஸ்லாமியனல்ல! நமது மத உருவில், நம்மை ஏமாற்றக் கிளம்பியிருப்பவன்!"

எதிர்ப்பாளர்களின் கணைகள் கிளம்பின—மன்னனும் மருளலானான்—கவிஞனோ, நான் கவிதை ரூபத்தில் அந்தக் கட்டத்தை வர்ணித்திருக்கிறேன் — அவ்வளவே ஒழிய என்னைத் தீயை வணங்குவோரில் ஒருவனாகச் சேர்ப்பது அநீதி! அக்கிரமம்! அடுக்காது!— என்று முறையிட்டான்.

அவன் ஓலத்தைவிட, அவர்கள் கூச்சலே பெரிதாக இருந்தது.

அதனால், அரசனும் நம்பினான்—கவிஞனைச் சந்தேகித்தான். ஊரைவிட்டே ஓட்டினான். ஒரு சில நாட்களுக்குமுன்பு, "கவிச்சக்கரவர்த்தியாரே! பாரசீகத்தின் பழைய மன்னர்களின் வரலாறுகளையெல்லாம் தீட்டிவிட்ட தாங்கள் ஒரு சாதாரணமான கவியல்ல. தங்களைச் சுவர்க்கத்தின் தூதன் என்றே கருதுகிறேன். அபுல் காசிம் என்ற பெயரால் இனி உங்களை அழைக்கப்போவதில்லை, நான். சுவர்க்க தூதன்—பர்தூசி—என்றே அழைப்பேன்" என்று மனமாரப் பாராட்டிய மன்னன், அவனை விரட்டினான! மதம், வெற்றிபெற்றது, சதிகாரர்கள் மகிழ்ந்தனர்!

என்ன செய்வது என்று ஏங்கியவனாய், வீதிக்கு விரட்டோடப்பட்ட பர்தூசி அலைந்து திரிந்துகொண்டிருந்தபோது, அரசவையிலே அவனுடைய நூல் படிக்கப்பட்டு முடிந்தது. எரிச்சல் கொண்டோர், ஏதேதோ சொல்லியபோதிலும், கவிதைகளின் மாண்பை மறக்க முடியவில்லை, மன்னனால். ஒரு பக்கம் கோபம், இன்னொரு பக்கம் ஆனந்தம் — எனினும், கவிஞன் கேட்டதொகை அறுபதினாயிரம் பவுனையும் அனுப்பிவைக்குமாறு கட்டளையிட்டான், கஜானா அதிகாரிக்கு. அரசனின் சங்கடமான நிலையை அறிந்த கஜானா அதிகாரி, சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கிக்கொள்ள முயற்சித்து, அறுபதினாயிரம் பவுனையும் அனுப்பினான்—வீரர்கள் வசம். அந்தப் பொன் கட்டிகள் யாவும் உண்மையானவையல்ல; முலாம் பூசப்பட்டவை! இந்தத் தந்திரம், வீதியில் திரிந்துகொண்டு, சத்திரங்களில் உறங்கிய வண்ணம் உலாவிக்கொண்டிருந்த பர்தூசிக்கு எட்டிற்று. அவனைச் சந்தித்து அரச தூதுவன், அறுபதினாயிரம் பொன்னையும் அளித்தான்! அபுல்காசிம், ஒரு கட்டியை எடுத்து உறைத்தான்—காலையில்மலரும்விடி வெள்ளியைப் போல இருந்தது, நிறம். கோபத்துக்கு இரையானான்—குமுறும் எரிமலையானான் கவி—'இந்தா! இந்தா!' என்று வீதியில் சென்றுகொண்டிருந்த ஏழைகளுக்கும், பொருளைக் கொண்டுவந்த அரச தூதுவனுக்குமாக அள்ளி அள்ளி இறைத்தான். செய்தி எட்டிற்று அரசனுக்கு! செய்தியில் ஒரு பகுதியே, எட்டும்படிச் செய்தனர், சதியாளர்கள்—கவிஞனின் செயலைமட்டும் செப்பினரே ஒழிய, சென்றவை அனைத்தும் பொன்னல்ல; வெள்ளி—எனும் உண்மையை மறைத்தனர். வெகுண்டவேந்தன், 'நான் அளித்த வெகுமதியையே அலட்சியம் செய்தானா? அற்பன், அணைகட்டி சுவர் எழுப்பப்போவதாக ஆர்ப்பரித்தானே? பாரசீகத்து வேந்தனாகிய இந்த முகம்மதுவையே அலட்சியம் செய்தானா?' என்று ஆர்ப்பரித்தான். கட்டளை பிறந்தது! கவிஞன் தலைநகரிலேயே இருக்கக் கூடாது என்று விரட்டி ஓட்டப்பட்டான்! காடு, மலை, வனம், ஆகியவைகளைத் தாண்டி கண்ணீரும் வெறும் கையுமாக டூஸ் நகர் வந்தான். குடிசை அவனை வரவேற்றது. கோலக் கிளி போன்ற அவன் மகளும், கூன் விழுந்துபோன சகோதரியும் வாஞ்சையுடன் வரவேற்றனர்!

* * *

"ஷா—நாமா!"

"மன்னர்களின் காதை!!"

"தெளிவும் பொருளும் நிரம்பிய கவிதைகள்"

"படித்தோன்மட்டுமல்ல, பாமரனும் புரிந்துகொள்ளக்கூடியதாக உளதே..."

"இந்நூலை இயற்றிய அபுல்காசிமை, பர்தூசி என்றழைத்ததில் எள்ளளவும் தவறில்லை..."

"மன்னன், மூர்க்கத்தனமாக நடந்துகொண்டானாமே?"

## விந்தை!

கடுமையான நடவடிக்கை எடுப்போம்! என்று அலறுகிறார் அமைச்சர் சுப்ரமணியம்.

திராவிட கழகத்தின்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பாராம்!—கனம் தெரிவிக்கிறார், கோவையில்.

சுப்ரமணியம் அடிக்கடி கோவைக்கு இப்படிப்பட்ட எச்சரிக்கைகள் செய்யவே, போகிறார் போலும்! சொந்த ஊரிலிருந்தபடி, எவ்வளவு சங்கநாதமும் செய்யலாமல்லவா, அதனால்!!

திராவிட கழகத்தினர் பலாத்கார செயல்களில் இறங்கினால் கடுமையான நடவடிக்கை எடுக்கச்சொல்வாராம்! — வக்கீலுக்குப் படித்தவரல்லவா, அதனால் வாக்கு சாதுர்யத்தோடே பேசியிருக்கிறார்.

பெரியார் அவர்கள், துளியும் பலாத்காரம் இல்லாது, எந்தக் காரியமும் நடைபெற வேண்டுமென்று அறிக்கைகளில் வலியுறுத்துபவர்—அதனை கொங்கு நாட்டுக் கோமகன் அறிந்ததனாலேயே, இந்த எச்சரிக்கைவிடுக்கிறார், போலும்!

அதோடு, நேரு பண்டிதர் வேலூர்க் கோட்டையில் விடுத்தாராம் ஒரு எச்சரிக்கை—நானும் அதையே முழக்குகிறேன், என்றும் அறிவித்திருக்கிறார், அன்பர்.

டில்லியின் ஒலிபெருக்கி!—என்று இதனால்தான், இவர்களை, மக்கள் அழைப்பது. அதனை உறுதிப்படுத்துகிறார், அமைச்சரானவர்.

அவர் அப்படித்தான் பேசுவார்! காங்கிரஸ்காரரான அவர், திராவிட நாட்டின் தீனபந்துவாக விளங்குவார் என்று எதிர்பார்க்கவில்லை, நாம்!

சுப்பரமணியம், காமராஜரின் சகா—காமராஜரோ, திராவிட கழகத் தலைவர் பெரியார் அவர்களின் 'ஆசி'பெற்ற பாக்கியசாலி! அனுதினமும், அதனை வலியுறுத்துகிறது, 'விடுதலை' ஏடு!

ஆனால் அமைச்சரோ, 'அழித்துவிடுவோம்' என்று எச்சரிக்கிறார். அவரோ காமராஜரின் மந்திரிசபையில் ஒரு அங்கம்!!

"நன்றியில்லாத செயல்! மன்னர் முகம்மதுவின் நாமம், பாரசிகம் உள்ளளவும் விளங்கும், ஷாநாமா வால். அப்படிப்பட்ட கவிஞனுக்கு செய்யப்பட்டது, அநீதி—அக்கிரமம் —அடாத காரியம்"

இப்படி, மக்கள் பேசத் தலைப்பட்டார்கள். நூலின் பெருமை, அரச மன்றத்திலிருந்து, மக்கள் மன்றத்துக்குச் செல்லலாயிற்று. மாணவனும், ஆசானும், அறிஞர்களும், சாதாரண மக்களும், இல்லாதவர்களும், புலவருமாக, நாடே உணர ஆரம்பித்தது, நூலின் அழகை.

பாரசிகத்தின் சரிதமே உருவாக்கப்பட்டது என்றனர்.

கி. மு. 600க்கு முற்பட்டு கி. பி. 900 வரையுள்ள மன்னர்களின் வரலாறுகள் தீட்டப்பட்டுவிட்டது என்றனர்.

இந்த வரலாற்றைத் தீட்ட அபுல் காசிம், எத்தனை காலம் பழைய ஏடுகளையும் நிகழ்ச்சிகளையும் புரட்டியிருக்க வேண்டும் என்று வியந்தனர்.

வரலாறுமட்டுமா! கவிதைகள் மூலம் ஒரு இலக்கியமே உருவாகி விட்டதே!—என்று பேசலாயினர்.

இப்படி நாடு, 'ஷாநாமா' நூல் குறித்து புகழ்பாடும் செய்தி மன்னனுக்கு எட்டலாயிற்று. அபுல் காசிமுக்குத்தான் அநீதிஇழைத்து விட்டதாக உணரலானான், மன்னன். அறுபதினாயிரம் பொன் கட்டிகளைத்தான் அனுப்பச் சொல்ல அதிகாரி பொன் முலாம் பூசிய வெள்ளிக் கட்டிகளை அனுப்பிய உண்மையும் வெளிவரலாயிற்று! வெந்தான், வேந்தன்—மனம் நொந்துகொண்டான்—ஒரு மாபெரும் கவிஞனை நிந்தித்து, பழி தேடிக்கொண்டோமே என்று வருந்தினான்—அரச அதிகாரிகளை அழைத்தான் — டஸ் நகருக்குப் புறப்படுக என்றான்—அனிமணிகள், கவிஞனுக்கான ஆபரண வகைகள் விருது, வெற்றிப்பட்டயம் முதலிய வைகளோடு ஒரு லட்சம் பவுன்களை அரசனே சோதித்து அணிதேர்ப் புரவிகளுடன் ஆடம்பரமாக அனுப்பித்து வைத்தான் டஸ் நகருக்கு! கவிஞனைக் கவுரவிக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைத்ததே எனும் ஆனந்தத்துடன், அரச தூதர்கள், சென்றுகொண்டிருந்தார்கள. கவிஞன் என்றாலும் சாதாரணக் கவிஞனா, அவன்! மக்கள் கவிஞன்—பாரசீக வரலாறு படைத்த கவிஞன்—வெள்ளிக் கட்டிகளை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்த கவிஞன்—அவனுக்கு, அரச விருதுக்களையும் லட்சம் பவுன்களையும், சமர்ப்பிக்கப் போகிறார்கள்! அரசன், அரண்மனையிலிருந்தபடி, ஆனந்த பரவசத்தனாகயிருந்தான் —அறுபதினாயிரம் பொன்தானே கேட்டான்! லட்சம் அனுப்பியுள்ளேன்! அவைகளைக் கொண்டு, நகருக்குச் சுவர் எழுப்புவான் — அப்படி எழுப்பும்போது நன்றி மறக்காதவன் என்று என்னை வாழ்த்துவான், என்றெல்லாம் கனவுகண்டு பூரித்துக்கொண்டிருந்தான்.

டஸ் நகருக்குள், அரசனின் தூதர்கள், ஆடம்பரத்தோடு நுழைந்தார்கள். அதே சமயத்தில், நகரின் மற்றொரு வாயில் வழியாக ஒரு பிண ஊர்வலம் போய்க்கொண்டிருந்தது.

பொன்னும் பொருளும் தேவையிலாத உலகுக்கு, பர்தூசி போய் விட்டான்—நாடு புகழும் உன்னதக் கவிஞன் பசியாலும் நோயாலும் வாடி, அருமைமகளின் பருவம் பாழாவது கண்டு நொந்து, அணு அணுவாகச் செத்து, இப்போது சுடுகாடு நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறான் பிரேதமாக என்பதை எப்படி அறிவார்கள், அவர்கள்?

பர்தூசியின் குடிசையை நெருங்கினார்கள்.

அங்கு தவழ்ந்த அமைதியும் நிலைமையும், விஷயத்தை விளக்கிற்று.

முகம்மதுவின் தூதர்களால் எதுவும் பேச முடியவில்லை.

காணிக்கைகளையும் இலட்சம் பொன்னையும், கவிஞனுடைய மகளின் காலடியில் வைத்தனர்.

அவள், அதனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. என் அப்பாவின் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த போது தேவைப்பட்டது, பொன்—இந்தப் பொன் கிடைத்திருந்தால் ஒருவேளை அவர் உயிரோடு பிழைத்திருக்கக்கூடும்—ஆனால் அப்போது உங்கள் அரசனோ, ஊரும் நாடுமோ எங்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இப்போது ஏன்? — என்றாள் கதறியவண்ணம்.

கவிச்சக்கரவர்த்தியாரின் சகோதரியாரே! தயவுசெய்து, கவிஞனின் கனவை, நீங்களாவது நிறைவேற்றி வையுங்களேன் — மன்னர் மனம் புழுங்கி அனுப்பியிருக்கும் இப் பொன்னை ஏற்றுக்கொள்ளமாட்டீர்களா—என்றனர்.

'சரி' என்றாள், சகோதரி, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு.

இலட்சம் பொன்! கவிஞனின் கனவு நிறைவேற்றப்பட்டது — பெரிய சுவர்கள், எழும்பின, நகரைச் சுற்றி, மீந்த பொருளைக் கொண்டு, பர்தூசியின் பெயரால் ஒரு சந்தையும் நிறுவப்பட்டது.

அவன் பெயர், இன்றும் பாரசிக மக்களால் கொண்டாடப்படுகிறது! ஆண்டுகள் ஆயிரம் ஓடிவிட்டது —ஆனால், அவன் தந்த 'ஷாநாமா' நூலும், அதன் மூலம் அவன் செய்ய விரும்பிய பொதுநன்மையும் இன்றும் எல்லோராலும் பாராட்டப் படுகிறது. கவிஞன் மட்டுமல்ல அவன் — இருதயம் உள்ள ஒரு கவிஞன், எனவே அவன் செத்தும் சாகாதவன் என்கின்றனர் எல்லோரும்.

★

# மாநில மாநாடு

## திருச்சியில் கூடுகிறது!

எழிலோடு! எக்களிப்போடு! விரைவில்!

★

வசதியான இடத்தில்

வகையான பந்தலில் மாநாடு கூடும்

★

வரவேற்புக் குழுவினர்

இடம் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

★


## கழகத் தோழர்களே!

## நிதி திரட்டுக!

ஆக்கந் தருக! ஊக்கம் ஊட்டுக!

பொறுப்பாளர்;

தி. மு. க. தலைமை நிலையம்.



# போலீஸ்! போலீஸ்!!

## (1)

தம்பி,

"எங்கெங்கு கொதிப்பும் கொந்தளிப்பும் ஏற்படக்கூடும் என்று தெரிகிறதோ, அங்கெல்லாம் பலமான போலீஸ் பாதுகாப்பு அமைத்துக்கொள்ளவேண்டும்; அது குறித்து, உடனே எமக்குத் தெரிவிக்க வேண்டும்"

போலீஸ் பாதுகாப்பு அமைத்துக்கொள்வதென்றால் என்ன என்பதைத்தான் எல்லோரும் அறிவார்களே! பொதுக் கூட்டத்திலே போலீஸ்வளையம் இருக்கும்! அத்துமீறிப் பேசினார்கள் என்ற காரணம் காட்டி வழக்குகள் தொடரப்படும். தடியடி, துப்பாக்கி, இவைகளெல்லாம் கிளம்பும்.

கல்லக்குடியிலும் தூத்துக்குடியிலும் நாம் அனுபவித்தோம்.

பிற கட்சிக்காரர்கள் பிற இடங்களிலே கண்டனர்.

போலீஸ் பாதுகாப்பு! தம்பி! வெள்ளைக்கார ஏகாதிபத்யம், எந்தமுறையைக் கையாண்டு வந்ததோ அது இன்னும் மடிந்துபடவில்லை, மாறாக, புது மெருகுடன் புறப்படுகிறது.

கொதிப்பும் கொந்தளிப்பும் உள்ள இடங்களிலே போலீஸ்பாதுகாப்புப் பலமாக இருக்கட்டும் என்றால், அதன் பொருள், மக்கள் தங்கள் மனக்குறையை எடுத்துக் கூறினால், குமுறலை வெளியிட்டால், பிடி, அடி, சுடு, விடாதே என்பதுதான்.

கொதிப்பும் கொந்தளிப்பும், 'மக்களிடம் ஏன் ஏற்பட்டது; மக்களுடைய இயல்பா அது, பொழுது போக்கா! பாடு பலபட்டு, இடைப்பதைக்கொண்டு குடும்பம் நடத்திச் செல்வோம் என்ற பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொண்டு வரும் மக்கள், அமைந்திருக்கிற சர்க்கார் கேட்கும் வரி கொடுத்து, காட்டும் வழி நடந்து, திட்டும் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடந்துகொண்டு வரும் மக்கள், ஏன், கொதிப்பு அடைகிறார்கள், என்ன காரணத்தால் கொந்தளிப்பு ஏற்படுகிறது, அந்தக் கொதிப்பையும் கொந்தளிப்பையும் போக்குவதற்கான வழிவகை என்ன என்பது பற்றி எண்ணிப் பார்த்திடாமல், அதற்கேற்ற முறையில் காரியமாற்ற முன்வராமல், "கொதிப்பா? கொந்தளிப்பா? சரி! சரி! சரியான முறையிலே போலீஸ் பாதுகாப்பு அமைத்து, பயல்களின் கொட்டத்தை அடக்கிவிடு!"—என்று கட்டளை பிறப்பித்திருக்கிறது டில்லி. ஆமாம், தம்பி! டில்லி சர்க்கார் மாகாண சர்க்கார்களுக்கு அனுப்பியுள்ள 'தாக்கீதின்' கருத்தினைத்தான் நான் துவக்கத்திலே குறித்திருக்கிறேன்.

நேரு பண்டிதரின் நேர்த்தி மிக்க குணங்களைப் பாராட்டி, அவருடைய 'பவனி'யைக்கோலாகலமான விழாவாக்கிக் கொண்டாடி, மகர தோரணம் கட்டி, ஊரெல்லாம் அழகாக்கி, பாதைகளைச் செப்பனிட்டு, மரங்களுக்கும் சாயமடித்து, மட்டற்ற உற்சாகத்தோடு மகோற்சவம் கொண்டாடினார்களே, அந்த மக்களுக்கு, ஏலக்காய் மாலையும், பொன்னாடையும், ரோஜாவும் மல்லியும், வரவேற்பும் வாழ்த்தும் பெற்றுக் கொண்டு சென்றாரே அந்தப் பண்டிதர், சுடச் சுடத் தருகிறார், உடனடியாகத் தெரிவித்துக்கொள்கிறார், தமது நன்றியறிதலை! எங்கெங்கு ஏன் என்ற குரல் கிளம்புகிறதோ அங்கெல்லாம் போலீஸ் படை தயாராக இருக்கட்டும்! யாரார், இது அறமல்லவே, அழகல்லவே என்று கூறுகிறார்களோ, அவர்கள் மீது போலீசின் கண் பாயட்டும், எங்கெங்கு மனக்குறை வெளியிடப்படுகிறதோ, அங்கெல்லாம் போலீஸ் இருக்கட்டும்; உடனே அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, எனக்கு அறிவித்துவிட வேண்டும்! — என்று கூறி இருக்கிறார்!

கொதிப்பும் கொந்தளிப்பும் ஏற்பட இருக்கிறது, என்பதைப் பண்டிதர் உணருகிறார், ஏனெனில் பண்டிதரின் போக்குதான், இந்த கொதிப்புக்கும் கொந்தளிப்புக்கும் காரணமாக அமைந்திருக்கிறது! கொதிப்பும் கொந்தளிப்பும் கிளம்பப் போகிறது, ஆகவே போலீஸ் படைகளை அனுப்பி, அடக்கு! அடக்கு முறையை அவிழ்த்துவிடு, என்கிறார் அகில உலகிலும் பவனி வந்து சாந்தி, சமாதானம், சமரசம் போன்ற பேருண்மைகளைப் பேசிவரும், பஞ்சசீலர்!

கொதிப்பும் கொந்தளிப்பும் கொள்ளக் கூடும்—காரணம் கண்டறிக, குறை கூறுவர், சமாதானம் கூறுக; துயர் அடைவர், துயர் துடைத்திடுக! — என்று கூறுவார் எமது பண்டிதர், அதிகார வெறியும் ஆணவப் போக்கும், ஏகாதிபத்தியத் திமிரும் கொண்

---

**தமிழகத்தின் வடக்குப் பகுதியில் ஆந்திர மாநிலத்தில் சிக்கிக் கிடக்கும் தமிழ்ப் பகுதிகள், தமிழகத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்பதை, பிரச்சினையை அணுக இருக்கும் இந்திய அரசாங்கமானாலும் சரி — அல்லது, ஆந்திரா சென்னை அரசாங்கங்களானாலும் சரி—அவை, தம் மனதில் இருத்திக்கொள்ளவேண்டும்.**

**பொதுச்செயலாளர்**
**தி. மு. க.**

டவர்களன்றோ, மக்களிடம் கிளம் பும் கிளர்ச்சியைத் தடுக்க அடக்கு முறை வெறி நாய்களை அவிழ்த்து விடுவர்; காலமெல்லாம் விடுதலைக்குப் போராடிய கர்ம வீரன், காந்தி அடிகளின் வாரிசு, மனித ருள் மாணிக்கமாம் எமது நேருவா, வெள்ளையன்போல் வெறியாட்டமாடுவார், என்று பேசிடும் காங்கிரஸ் அன்பர்கள், முக்காடிட்டுக் கொள்ள வேண்டிய வகையிலே, நேரு சர்க்காரின் உத்தரவு உருவெடுத்திருக்கிறது, கொதிப்பும் கொந்தளிப்பும் கிளம்பினால், குண்டாந் தடியும் குண்டு மாரியும் புறப் படும் என்று!

அஹிம்சையை அவனிக்கே போதித்த அண்ணல் காந்தியின் ஒப்பற்ற வாரிசே, வருக!

அவனி புகழும் அன்பு நெறியை, அறநெறியை போர் வெறிகொண்டு அலையும் வல்லரசுகளுக்கும் ஊட்டி வெற்றி கண்ட, முடிசூடா மன்னா வருக!

மக்களாட்சியின் மாண்பினை அறிந்து ஒழுகும் மனிதகுல மாணிக்கமே வருக!

இவை போன்ற புகழ் மாலைகளை, அவர் 'பெரும்பாரம்' என்று கூறத்தக்க அளவு சூட்டி மகிழ்ந்தனர், மக்கள்; பெருந்தன்மையுடன். அவர்களிடம் கொதிப்பும் கொந்தளிப்பும் கிளம்பும் எனத் தெரிகிறது, எனவே உடனே, அடக்கிடப் போலீசை - ஏவுக! என்று கட்டளையிடுகிறார் கண்ணியர்!

தம்பி! வெள்ளைக்காரன் போடும் உத்தரவுபோல இருக்கிறதே, என்று கேட்கிறாயா! ஆமாம் இன்றைய டில்லி ஆட்சி நிறத்திலே சற்றுப் பழுப்பே தவிர, நடவடிக்கையிலே அதற்கு அண்ணன், என்பதை அடிக்கடி நினைவூட்ட, துப்பாக்கிச் சத்தம் கிளப்பியபடிதானே இருக்கிறது துரைத்தனம்!

ஏதாவது ஒரு பிரச்சினை எழும்பினால், மக்கள் உள்ளத்தை அந்தப் பிரச்சினை உலுக்கினால், வெள்ளைக்கார ஆட்சி முதலில் 'கவனியாமல்' இருக்கும், பிறகு அலட்சியமாகச் சில 'புத்திமதி' கூறும், பிறகு கண்டிக்கும், எச்சரிக்கை விடும்; பிரச்சினை குறித்து மக்களிடம் அக்கரை தொடர்ந்து இருக்குமானால், மக்களைச் சில காலம் செயலற்றவர்களாக்குவதற்காகஒரு தந்திரம் செய்யும் — அதுதான் கமிஷன் அமைப்பது என்பது!

பிரச்சினை, சிக்கல் நிறைந்தது— பலர் பலவிதமான கருத்துரை கூறுகின்றனர் — உண்மை எது பொய்யுரை எது என்பது விளங்கக் காணோம்—எனவே இது சம்பந்தமான எல்லா உண்மைகளையும் அறிந்து ஆய்வுரை வழங்க ஆண்டிப்பட்டி வேந்தர் தோண்டியப்பர், ஆஸ்திக பூஷணம் ஆனந்தாச்சாரி, மவுலானாமவுலவி ஷெருபுதின், மேரிமாதா கல்லூரிப் பேராசிரியர் ஜோசப் ஆகியோர் கொண்ட கமிஷனை நியமித்திருக்கிறோம், என்று அறிக்கை வெளியிடுவர்!

'கமிஷன்' அமைக்கப்படுகிறது என்றால், 'பிரச்சினை' குறித்து, எந்த நடவடிக்கையும் எடுக்காதே என்பது மட்டுமல்ல, பேசாதே, சிந்திக்காதே, என்பது பொருள்! காலங்கடத்தும் மார்க்கம்! கவனத்தை வேறு பக்கம் திருப்பி விடும் தந்திரம்! துரைமார் சர்க்கார் இதை அடிக்கடி கையாண்டனர்; இப்போது அவர்களே மூக்கின் மீது விரல்வைத்து ஆச்சரியப் படும் வகையில், அந்தத் தந்திரத்தை நேரு சர்க்கார் கையாண்டு வருகிறது!

ராஜ்ய புனரமைப்புக் கமிஷன் அமைப்பு இத்தகைய தந்திரத்திலே ஒன்றுதான்!

இங்கு மக்கள், சாத்பூரா மலைச் சாரலிலிருந்து குமரி வரையிலும், கேட்டது, ராஜ்ய புனரமைப்பு அல்ல!

## மக்கள், கேட்பது மொழி வழி அரசு!

மொழிவழி அரசுக் கிளர்ச்சி வலுப் பெற்றது; வெள்ளையர் போலவே வடவர் அமைத்துள்ள சர்க்கார், ஒரு 'கமிஷன்' அமைத்தது; கமிஷனுக்குச் சர்க்கார் இட்ட வேலை, மொழிவழி அரசு எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்பதல்ல, ராஜ்யப் புனரமைப்பு எப்படி இருக்கவேண்டும் என்பதாகும்!

மொழிவழி அரசு என்ற மக்கள் கோரிக்கையை மதித்து, அதன்படி நடத்திடத் துரைத்தனத்தார் முடிவு செய்திருப்பார்களானால், எல்லைக் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கவேண்டும்; ராஜ்ய புனரமைப்பு என்ற ஏமாற்று வேலைக்கு இடம் ஏற்பட்டிருக்காது!

ஆனால் டில்லி சர்க்கார், மக்கள் குரலுக்கு மதிப்பளிக்க விரும்பவில்லை, மழுப்பவும், காலத்தை ஓட்டவும், கவனத்தை வேறு பக்கம் திருப்பவுமே விரும்பினர்; எனவேதான், ராஜ்ய புனரமைப்பு கமிஷன் அமைத்தனர்.

அப்போதே இதனைக் கண்டித்தனர், விளக்கமறிந்தோர்; ஆட்சியாளர்களின் ஆதரவு தேடி அலையும் அடிவருடிகளோ, மொழிவழி அரசு ற்றி இப்போது ஏதும் கிளர்ச்சி வேண்டாம், இதோ கமிஷன் அமைந்துவிட்டது, நியாயம் கிடைக்கும்; நேரு ஆட்சியிலே நீதிகிடைக்கும், என்று நல்வாக்குக் கொடுத்தனர்.

'கமிஷன்' தன் அறிக்கையை நீட்டிவிட்டது; நாட்டிலே பல்வேறு இடங்களில்கொதிப்பும் கொந்தளிப்

பசில் குழுவின் அறிக்கைப்படி புதிய தமிழகத்தில் தமிழ் பேசும் பகுதிகள் முழுவதும் சேர்க்கப் பட்டதாகத் தெரியவில்லை. திரு-கொச்சி அரசிலுள்ள ஒன்பது தமிழ்த் தாலுக்காக்களில் ஐந்தைத் தான் புதிய தமிழகத்தோடு சேர்க்கக் குழு சிபாரிசு செய்திருக்கிறது- அவை, அகத்தீசுவரம் தோவாளை, கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை ஆகும்; தேவிகுளம், பீருமேடு தாலுகாக்களிலும், நெய்யாற்றங்கரைத் தாலுகாவின் பெரும் பகுதியிலும், சித்தூர் தாலுகாவிலும் தமிழர்கள் பெரும்பான்மையராக இருந்தும், அங்கெல்லாம் நடைபெற்ற தேர்தல்கள் தமிழர்களையே தேர்ந்தெடுத்து, அவை தமிழ்ப் பகுதிகள்தாம் என்பதை விளக்கியிருந்தும், பசில் குழு, அவற்றைக் கேரளத்தோடு சேர்க்க முற்பட்டிருப்பது கண்டனத்துக் குரியதேயாகும்; கொள்ளேகாலம் — பெரும்பான்மையான கன்னடியர்களால் நிறைந்திருக்கிறது — என்று தாலூகா ரீதியில் கணக்கிட்டு, அதனைக் கன்னடத்தோடு சேர்க்க முற்படும் பசில் குழு, தேவிகுளம், பீருமேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் ஆகிய தாலுகாக்களைத் தமிழகத்தோடு சேர்க்காமலிருப்பது என்ன முறையின்பாற் பட்டதோ தெரியவில்லை.

பொதுச்செயலாளர்
தி. மு. க.

பும் கருவில் உருவாகிவிட்டன; இது தெரிந்ததும், கொந்தளிப்பு கிளம்பக் கூடிய இடங்களுக்குப் போலீஸ் படைகளை அனுப்புக! என்று டில்லி உத்தரவு பிறப்பித்து விட்டது!!

கண் விழித்துக் கொண்டால்' அவன் தலை மீது போடுவதற்கு, பாராங்கல் ஒன்றை முதலிலேயே தயாராக வைத்துக்கொள்—என்று கைதேர்ந்த திருடன், ஆரம்பக் காரனுக்குச் சொல்வானும்!!

மாகாண சர்க்காருக்கு மத்யசர்க்கார், கூறுகிறது, மக்கள் கிளம்பினால், உடனே மண்டையிலடித்து உட்கார வைக்கத்தக்க முறையில், போலீஸ் ஏற்பாடு தயாராகட்டும் என்று!

கமிஷன் வெளியிட்ட அறிக்கை' நிச்சயமாகக் கொதிப்பையும் கொந்தளிப்பையும் உண்டாக்கும் என்பதை நேரு நன்ருக அறிவார்!

மக்களுடைய உரிமை மண்ணுக்கப்படும்போது, நீதி புறக்கணிக்கப்பட்டு, நியாயம் நசுக்கப்படும் போது, கொதிப்பும் கொந்தளிப்பும் மட்டுந்தானு, புரட்சியே வெடித்திருக்கிறது என்பதையும், அதனை அழித்தொழித்திட போலீசும் படையும் பாய்ந்தோடித் தாக்கியும் முடியாது போயிற்று என்பதையும் வரலாற்றுச் சுவடி எடுத்துக் காட்டத்தான் செய்கிறது. எனினும் நேரு பண்டிதர், மக்களிடம் தாம் ஊட்டிவிட்ட 'போலித் தேசிய அபின்' அவர்களைச் செயலற்றவர்களாக்கிவிட்டது; அவர்களுக்கு, தங்களுக்குள்ளாகவே தகராறுகளை வளர்த்துக் கொள்ளவும், சிண்டு பிடித்துச் சண்டையிடவும், சிறுமதி கொண்டு சச்சரவு கொள்ளவும், கூடிக் கெடுக்கவும், காலை வாரிவிடவும், காட்டிக் கொடுக்கவும்தான் விருப்பமும் பயிற்சியும் இருக்கிறதே தவிர, அவர்கள் தமக்குள் ஒன்றுபட்டு, கொடுமையைக் களைந்திட, அக்ரமத்தை எதிர்த்திட, அடிமைத் தளைகளை நொருக்கிட ஆற்றலுடன் போரிட மாட்டார்கள், என்று நம்புகிருர்! மக்களைப்பற்றி மேதோன்மத்தர்கள் கொண்ட கருத்தைத்தான் இந்த மனிதகுல மாணிக்கமும் கொண்டிருக்கிறது! எனவே தான், போலீஸ்! போலீஸ்!! என்று டில்லி கொக்கரிக்கிறது!

மொழிவழி அரசு என்பது இன்று நேற்று முளைத்ததல்ல!

காந்தீயக் கழனியிலே பயிரிடப்பட்டதாகும்!

அதற்கும் முன்பேகூட, விடுதலைக் கிளர்ச்சிக்கான முயற்சி தொடங்கப்பட்ட நாளிலிருந்தே, மொழி வழி அரசு மக்கள் மன்றத்திலே உலவிற்று.

பாரத மக்களே! பரங்கியின் ஆட்சியை நீக்கிட வாரீர்!—என்று மட்டும் கூறினரில்லை, பாலகங்காதர திலகர்!—அவருடன் இருந்தோரும் அவர் வழி வந்தோரும், விளக்கமாகவே பேசினர், மக்கள் வீறுகொண்டு எழத்தக்க வகையில், மொழிவழி அரசு அமைய வேண்டும் என்ற குறிக்கோளுடன்.

சுயராஜ்யப் போர்ப்படை திரட்டிடப் பணியாற்றிய சோர்விலாத் தலைவர்கள், எங்தெந்த இடத்தில் எங்தெந்த மொழியாளர்களைக் கண்டனரோ, அவர்களுடைய வரலாற்றை எடுத்துக்காட்டித்தான், உணர்ச்சி யூட்டினர்!

சேரனும் சோழனும் பாண்டியனும் ஆண்ட செந்தமிழ் நாட்டவரே! இன்று செக்குமாடுகளென நம்மை நடத்தும் வெள்ளையன் ஆதிக்கத்தை எதிர்த்திட வாரீர்! என்று கூவி அழைத்தனர்.

மாவீரன் சிவாஜியின் வழி வழி வந்தவீரர்காள்! மராட்டியம் இன்று மமதை நிறைந்த வெள்ளையன் பிடியிலே சிக்கிச் சீரழிவதைப் பார்த்தும் உங்கள் இரத்தம் கொதிக்கவில்லையா! எங்கே சிவாஜி ஊட்டிய வீரம்! அந்த மாமன்னன் தந்த விடுதலை உணர்ச்சி மங்கிக் கிடக்கிறது, மராட்டிய மாவீரர்காள்! மடிந்து போகவில்லை! மாற்றுனை ஓட்டிட வாரீர்! மராட்டியத்தின் கீர்த்தியை மீண்டும் நிலை நாட்டிட வாரீர்! — என்றுதான் அழைத்தனர்!

விஜய நகர சமஸ்தான காலத்தைக் கவனப்படுத்தித்தான் ஆந்திரர்களை அழைத்தனர்!

ரன்ஜித் சிங்கின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தனர், பாஞ்சாலத்தில்!

ஷா ஆலம் சக்கிரவர்த்திக்கு வெள்ளையர் இழைத்த கொடுமைகளை எடுத்துக் கூறித்தான், டில்லி வட்டாரத்தினரை, இஸ்லாமியரை அழைத்தனர்!

---

**தென்னகத்தில், இந்திப் பல்கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று பசில் குழு அறிக்கை கூறுவது அவசியமற்ற கூற்ருகும்; தென்னகத்திற்கு அது கிஞ்சிற்றும் அவசியமற்ற ஒன்ருவதோடு, தென்னக மொழிகளின் வளர்ச்சியை அது பாதிக்கக் கூடிய தாகவும் அமைந்துவிடும்; எனவே அப்படிப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்திற்குத் தென்னகத்தில் அவசியமில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது. வடநாட்டில் தென்னக மொழி ஒன்றைப் பல்கலைக் கழகப் பாடத்திட்டத்தில் வைக்க வேண்டும், என்று பசில் குழு கூறுவது, வெறும் கண் துடைப்பு வேலையாகும்; அதனுல் திராவிடத்துக்கு ஒரு பலனும் இல்லை.**

**பொதுச்செயலாளர்,**
**தி. மு. க.**

---

இங்ஙனம், மொழிவழி அமைந்திருந்த அரசுகளின் முன்னுள் சிறப்புகளை எடுத்துக் காட்டித்தான், போர்முகாம் அமைத்தனர்!

இது போதாது என்று காந்தியார், தெளிவுபட, திட்டவட்டமாகத் தெரிவித்தார், சுயராஜ்யம் கிடைத்ததும், 'மொழிவழி அரசு'தான் அமைக்கப்படும் என்று.

அன்று முதல் இன்று வரை, 'மொழிவழி அரசு' என்ற பிறப்புரிமைக் கிளர்ச்சி இருந்து வருகிறது.

மக்களுடைய கிளர்ச்சிக்கு மதிப்பளிக்கும் மாண்பு இருந்திருக்குமானல், 'மொழி வழி அரசு' திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர, நேரு சர்க்கார் முனைந்திருக்குமே தவிர, மூக்கில் கொஞ்சம் நாக்கில் கொஞ்சம் அறுத்து எடுத்து ஒட்டு வேலை நடத்தச் சொல்லும் ராஜ்ய புனரமைப்புக் கமிஷனையா நியமித்திருக்கும்!!

மொழிவழி அரசு என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டால், எந்தெந்த இடத்தில் எந்த மொழியாளர் தொடர்ச்சியான பிரதேசத்தில் வதிகின்ருர்கள் என்பதைக் கண்டறிந்து, அந்த வகையிலே எல்லைகளை நிர்ணயிக்கும் வேலை நடந்திருக்கும். ராஜ்ய புனரமைப்பு என்ற 'கபட நாடகம்' நடைபெற்றிருக்காது.

பொறுப்பற்ற முறையில் மக்களுடைய உரிமையை உதாசீனம் செய்துவிட்டு, அவர்களுக்கு அநீதி இழைக்கும் திட்டத்தை நீட்டி, இதைக் கண்டு மக்கள் குமுறினால், சும்மாவிட்டுவிடக்கூடாது கூப்பிடு 'போலீசை' என்று கூவுவது! இதற்கா நேரு சர்க்கார்! இந்த நேர்த்தியான முறையிலே ஆட்சி நடத்துகிறார் என்று மகிழ்ந்தா தம்பி, ஊரெல்லாம் உற்சவம் கொண்டாடினார்கள், உலகெலாம் சுற்றி வரும் அந்த மலைமகனுக்கு!!

அன்பன்,

**அண்ணாத்துரை.**

**தம்பி**
மூன்றாமாண்டு துவக்க இதழ், பல புதிய சிறந்த பகுதிகளுடன் 25-10-55-ல் எங்கும் கிடைக்கும்.
நிர்வாகி
**தம்பி அலுவலகம்,**
சிதம்பரம்.




காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.